## விரிவடையும் எல்லைகள்

1950கள் மற்றும் 1960கள் சிங்கப்பூருக்கு மாற்றத்தை ஏற்படுத்திய பத்தாண்டலகுகளாக (decades) இருந்தன. 1965 இல் விடுதலை பெற்றதைத் தொடர்ந்து, சிங்கப்பூர் விரைவாக தொழில்மயமாக்கப்பட்டு நகரமயமாக்கப்பட்டது. இம்மாற்றங்களுக்கு நடுவில், ஓவியர்கள் புதுமைகளை உருவாக்குவதற்கான உடனடி விருப்பத்தைப் பகிர்ந்து கொண்டனர், நவீனமயமாகும் நகர-நாட்டுடன் ஒத்துப்போகும் புத்தோவிய மொழிகளை அவர்கள் தேடினர்.

ஓவியத்தில் சுருக்க முறையைப் பின்பற்றும் நடைமுறை விரைவில், நவீனமாக இருப்பதற்கு ஒத்ததாக மாறியது. சிங்கப்பூரில் சுருக்கவியல் ஓவியத்தின் எழுச்சிக்குப் பங்களித்த ஓவியர்கள் பெரும்பாலும் நன்யாங் நுண்கலைக் கழகம் அல்லது ஓவியச் சங்கங்களுடன் இணைந்திருந்தனர், மற்றவர்கள் தாமாகக் கற்றுக்கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் பல்வேறு பண்பாட்டு மூலங்களிலிருந்து படைப்பூக்கம் பெற்று, தனித்துவமான ஓவியச் சொற்களஞ்சியங்களை (artistic vocabularies) வளர்த்துக் கொண்டனர். அவர்களின் படைப்புகள் அரைச்-சுருக்க வடிவங்கள் மற்றும் சின்னங்கள் முதல் இயற்கையிலும் மெய்யுலகிலும் வேரூன்றியவை வரை பரந்திருக்கின்றன.

இக்காட்சிப்படுத்தல், ஓவியர்களை மையமாகக் கொண்ட குழுக்களை தனிப்பட்ட படைப்புகளுடன் பின்னிப்பிணைக்கிறது. ஓவியர்கள்

**SG2**

சுருக்கம் (abstraction) மற்றும் உருவப்படுத்துதலுக்கு (figuration) இடையில் நகர்ந்தபோது, அவர்களின் நடைமுறைகளுக்கு அடித்தளமாக இருந்த துணிவு உணர்வையும், இலக்கியம், கோட்டுப்பட ஓவியம், வரைகலை வடிவமைப்பு போன்ற துறைகளுடன் ஓவியத்துக்கிருக்கும் குறுக்கீட்டிணைவுகளையும் இஃது ஆராய்கிறது.

| |
|---|
| மேலேலிம் யூ குவான் (Lim Yew Kuan)<br>(பிறப்பு 1928, சீனா; இறப்பு. 2021, சிங்கப்பூர்)<br>ஈதர்<br>1959<br>பலகையில் எண்ணெய்<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2015-00619<br><br>கீழே<br>லிம் ஹக் டாய் (Lim Hak Tai)<br>(பிறப்பு 1893, சீனா; இறப்பு. 1963, சிங்கப்பூர்)<br>கலகம்<br>1955<br>பலகையில் எண்ணெய்<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 1998-00706<br><br>'கலகம்' ஓவியத்தில், லிம் ஹக் டாய் (Lim Hak Tai), 1950களில் சிங்கப்பூரில் மாணவர் போராட்டங்கள் மற்றும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களின் போது ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையை வரைகிறார். தேசிய சேவைக் கலவரங்கள் (1954) மற்றும் ஹாக் லீ பேருந்துக் கலவரங்கள் (1955) ஆகியவை அக்காலத்தின் நன்கு-அறியப்பட்ட வரலாற்று நிகழ்வுகளில் அடங்கும். கோண வடிவங்கள், துண்டு துண்டான வடிவங்கள் மற்றும் சுருக்க வெளி (abstract space) மூலம், அக்காலத்தின் கொந்தளிப்பு மற்றும் ஆற்றலை வெளிப்படுத்த லிம்மின் (Lim) கனவடிவியலை (Cubism) ஈடுபடுத்தியதை இப்படைப்பு பிரதிபலிக்கிறது. சமூக மற்றும் அரசியல் போராட்டக் காட்சிகளைக் கனவடிவியல் நுட்பங்களுடன் அவர் ஒருங்கிணைத்திருப்பது, ஓவியம் பற்றிய ஆய்வுமுயற்சிகள் மற்றும் உள்ளூர் விஷயங்களில் ஈடுபாடு ஆகிய இரண்டிலும் அவரது முழு ஒப்படைப்பை எடுத்துக்காட்டுகிறது. |
| "நான் அதை (பாணியை) உணர்வுமிகுத்துத் தேடுவதில்லை அல்லது வேண்டுமென்றே உருவாக்குவதில்லை. இஃது ஓர் ஓவியன் செய்யும் செயல்களில் ஒழுங்கையும் அறிவுடைமையையும் கொண்டுவருவதற்கான ஒரு வழியாகும். இஃது ஒரு நினைவுக் |

குறிகாட்டியாகவும், வெவ்வேறு கருத்துகளையும் உணர்ச்சிகளையும் இணைத்து, அவற்றை ஒரு படைப்பாற்றலாக இணைக்கும் ஒரு வழியாகவும் செயல்படுகிறது."
சியோங் சூ பியெங் (Cheong Soo Pieng), தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், 1983.

சிங்கப்பூரின் ஓவிய வரலாற்றில் ஒரு முக்கிய ஓவியராகவும் கல்வியாளராகவும் சியோங் சூ பியெங் (Cheong Soo Pieng) கருதப்படுகிறார். சியோங்கின் முக்காலி வரைபலகை (easel) ஓவியம், சீன மை அழகியல் ஆகியவற்றின் தொகுப்பு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் பண்பாட்டு வாழ்க்கையுடன் அவரது ஆழமான ஈடுபாடு ஆகியவை ஒரு முன்னணிப் புதுப்பாணி ஓவியராக அவரது மரபீகையை (legacy) உறுதிப்படுத்தின. சியோங், உலோகம் போன்ற வழக்கத்திற்கு மாறான பொருள்களையும் ஆய்வுசெய்து, செழுமையான இழைவு அமைப்புள்ள கோவைகளை (assemblages) உருவாக்க பொருள்களைக் கண்டுபிடித்தார். சியோங் 1946-இல் சிங்கப்பூருக்கு வந்து நன்யாங் நுண்கலைக் கழகம் மற்றும் சீன உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியரானார். அவர் தனது ஓவியங்களில் பெரும்பாலும் தனது பெயருடன் ஒலிப்பொற்றுமை கொண்ட பெயரான 'சி பின்'னைப் (Si Bin) பயன்படுத்திக் கையெழுத்திட்டார், இங்குக் காட்சிப்படுத்தப்பட்ட அவரது சில படைப்புகளில் இதைக் காணலாம்.

சியோங் சூ பியெங் (Cheong Soo Pieng)
(பிறப்பு 1917, சீனா; இறப்பு. 1983, சிங்கப்பூர்)
கற்பனை
1970
உலோகத்தில் புடைப்பு
ஓவியரின் பரிசு
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு ASB-0026

1960களின் பிற்பகுதியிலும் 1970களின் பிற்பகுதியிலும், சியோங் சூ பியெங் (Cheong Soo Pieng) உலோகப் புடைப்புச் சிற்பங்களின் தொடரை உருவாக்கத் தொடங்கினார், இது துணிச்சலான கலை ஆய்வுமுயற்சிக் காலகட்டத்தைக் குறிக்கிறது. இவ்வுலோகப் புடைப்புச் சிற்பங்கள் மறுசுழற்சி செய்யப்பட்ட பொருள்களையும் "கிடைத்த" பொருள்களையும் இணைத்துச் செய்யப்பட்டன, இஃது அவரது காலத்தில் வழக்கத்திற்கு மாறான கலை சாராத பொருள்களுடன் கலையை இணைப்பதற்கான ஓர் அணுகுமுறையாகும். தட்டையான மேற்பரப்பில் தொழில்துறைப் பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம், சியோங் தொட்டுணரக்கூடிய பண்புகள் மற்றும் ஆழத்தைக் 'கற்பனை'

SG2

| |
|---|
| படைப்பில் நிரப்பினார், ஓவியத்திற்கும் சிற்பத்திற்கும் இடையிலான இடைக்கோடுகளை மங்கலாக்கினார். |
| கூ சூய் ஹோ (Khoo Sui Hoe)<br>(பிறப்பு 1939, மலேசியா)<br>சூரியனின் குழந்தைகள்<br>1965<br>கித்தானில் எண்ணெய்<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2018-00045<br>ஜூன் டான் போ ஹா (June Tan Poh Hah), டேனியல் மற்றும் பினாங்கிலுள்ள மரபு ஆராய்ச்சி நிறுவனத்தின் சூ கிம் தியோ (Soo Khim Teo) ஆகியோரின் நினைவாக ஒரு தனிநபரின் நன்கொடைகளாலும் சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் கலை தத்தெடுப்பு மற்றும் கையகப்படுத்தல் திட்டத்தாலும் இக்கையகப்படுத்தல் சாத்தியமானது.<br><br>துடிப்பான உருவங்கள் ஒரு கனவு போன்ற நிலப்பரப்பில் நீண்டு செல்லும்போது இயற்கையின் கூறுகளுடன் இணக்கமாக உள்ளன. அவற்றின் நீளமான மூட்டுகள் 'வயங் குலிட்' (நிழல் பொம்மைகள்) போல இருக்கும். சிங்கப்பூர் மாநாட்டு மண்டபத்திற்காக கட்டடக் கலைஞர் லிம் சோங் கீட் (Lim Chong Keat) அவர்களால் வரையப் பணிக்கப்பட்ட இப்படைப்பு, வெப்பமண்டலக் காலநிலை மற்றும் வட்டார மையக்கருத்துகளுடன் புதுப்பாணி வடிவமைப்பை ஒருங்கிணைப்பதற்கான அவரது பார்வையை நிறைவு செய்கிறது. |
| "முகங்கள், நிலப்பரப்புகள், மனித வடிவங்கள் மற்றும் அடையாளம் காணக்கூடிய மற்றும் கற்பனை செய்யக்கூடிய பொருள்கள் இரண்டும் உணர்ச்சிமிக்க ஆற்றலுடன் எதிரொலிக்கும். நான் பிறந்த நேரம், நான் பிறந்த பகுதி மற்றும் எனது நோக்கம் பற்றி எனக்குத் தெரியும். ஒவ்வொரு வேடிக்கையான உலகமும் உண்மையில் என்னவெல்லாம் கொண்டிருக்கலாம் என்பதைக் காண பார்வையாளரை நான் அழைக்கிறேன்..."<br>கூ சூய் ஹோ (Khoo Sui Hoe), கூ சூய் ஹோ: ஒரு கண்ணோட்டம், 2015.<br><br>கூ சூய் ஹோ, நன்யாங் நுண்கலைக் கழகத்தில் சியோங் சூ பியெங் (Cheong Soo Pieng), ஜார்ஜெட் சென் (Georgette Chen) மற்றும் லாய் ஃபூங் மோய் (Lai Foong Moi) ஆகியோரின் கீழ் பயின்றார். 1971 ஆம் ஆண்டில், ஓவியர்களால் நடத்தப்படும் ஆல்ஃபா கலைக்கூடத்தை நிறுவ அவர் உதவினார், இஃது ஓவியம் தொடர்பான சொற்பொழிவை வளர்த்து உள்ளூர் மற்றும் சர்வதேச ஓவியர்களின் படைப்புகளைக் காட்சிப்படுத்தியது. பின்னர், ஜான் டி. ராக்ஃபெல்லர் III (John D. Rockefeller III) நிதியத்தின் மானியத்தின் ஆதரவுடன், கூ நியூயார்க்கில் அச்சுக்கலையை ஆராய்ந்தார். கூவின் ஓவியங்களில் நிலப்பரப்புகளும் மனித உருவங்களும் ஆதிக்கம் செலுத்தும் |

| |
|---|
| மையக்கருத்துகளாகும். கற்பனை உலகங்களையும் உளவியல் சூழ்நிலைகளையும் தூண்டுவதற்காக அவர் வேண்டுமென்றே மிகவும் சுருக்கமான ஓவியப் பாணியை ஏற்றுக்கொண்டார். |
| வின்சென்ட் எம். ஹோய்சிங்டன் (Vincent M. Hoisington)<br>(பிறப்பு 1924, சிங்கப்பூர்; இறப்பு 1972, சிங்கப்பூர்)<br>நாகரிகம்<br>சுமார் 1970கள்<br>பலகையில் பாலியூரிதீன் வண்ணப்பூச்சு<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு<br>2019-00531<br><br>'நாகரிம்' என்ற படைப்பில், ஒரு மர்மமான மற்றும் பயங்கரமான நிலப்பரப்பு விரிவடைகிறது. பிரிக்கப்பட்ட வளைவுகள் மற்றும் காற்றில் அலையும் உருவங்கள் தோன்றுவது போல் தெரிந்து பின் படத்தின் தளத்திற்குள் மறைந்துவிடுகிறது. தொழில்துறையில் பயன்படுத்தப்படும் பாலியூரிதீன் வண்ணப்பூச்சு மற்றும் நீர்த்தி எண்ணெயைப் (turpentine) பயன்படுத்தி, வின்சென்ட் எம். ஹோய்சிங்டன் (Vincent M. Hoisington) ஓர் ஒளிஊடுருவக்கூடியதும் அடுக்குகளைக் கொண்டதுமான மேற்பரப்பை உருவாக்க, கழுவுதல் மற்றும் சொட்டுவிடுதல் முறைகளைப் பயன்படுத்தினார். ஓவியத்துக்கும் உள்ளக வடிவமைபுக்கும் இடையிலான இடைக்கோட்டை மங்கலாக்கிய, தாமாகவே கற்றுக்கொண்ட ஓவியரான ஹோய்சிங்டனின் புதுமையான பொருட்பயன்பாடு அவருக்குப் பெரும் எண்ணிக்கையிலான பொது மற்றும் தனியார் வரைபணியமர்த்தல்களைப் பெற்றுத் தந்தது. |
| "ஓவியம் எனக்கு விடுதலை தரும், வணிகத்தை அன்று."<br>டே பக் கோய் (Tay Bak Koi), தி நியூ பேப்பர், 1990.<br><br>டேய் பக் கோய், இயற்கைக்காட்சிகளுக்கும் தனித்துவமான எருமைகளின் கற்பனை சித்தரிப்புகளுக்கும் புகழ்பெற்றிருந்தார். எருமை என்பது தென்கிழக்காசியப் பண்பாடுகளின் மீள்தன்மையையும் மரபையும் அடையாளப்படுத்தும் ஒரு விலங்காகும். நன்யாங் நுண்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற இவர், சியோங் சூ பியெங் (Cheong Soo Pieng), ஜார்ஜெட் சென் (Georgette Chen) போன்ற செல்வாக்கு மிக்க ஓவியர்களிடம் பயின்றார், மேலும் எண்ணெய் மற்றும் நீர் வண்ண ஓவியத்தில் தனது திறமைகளை வளர்த்துக் கொண்டார். அவரது படைப்புகள் உருவயியல் (figuration) மற்றும் சுருக்கம் இரண்டையும் உள்ளடக்கியது, இஃது அவரது |

| |
|---|
| பல்துறைத்திறனைக் காட்டுகிறது. 1969 ஆம் ஆண்டில், சிங்கப்பூரில் உள்ள ஹில்டன் (Hilton) விடுதியிடமிருந்து அதன் உட்புற இடங்களுக்கு 300 ஓவியங்களை உருவாக்க டே (Tay) ஒரு பெரிய வரைபணியமர்த்தலைப் பெற்றார், இதன் மூலம் அவர் ஓர் ஓவியராக முழுநேர ஈட்டுதொழிலில் (career) தொடர முடிந்தது. |
| டே பக் கோய் (Tay Bak Koi)<br>(பிறப்பு 1939, சிங்கப்பூர்; இறப்பு. 2003, சிங்கப்பூர்)<br>தலைப்பற்றது ('64 தொடர் 3)<br>1964<br>காகிதத்தில் நீர் வண்ணம் மற்றும் மை<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் 2024-00340<br><br>தலைப்பற்றது ('64 தொடர் 3) ஓவியத்தில், டே பக் கோய் (Tay Bak Koi), wet-on-wet நுட்பத்தைப் பயன்படுத்தி வண்ணப்பூச்சு மற்றும் மை ஆகியவற்றைப் பயன்படுத்துகிறார். மேலும், மென்மையான மாற்றங்கள் மற்றும் வெளிப்படையான குறுக்குவெட்டு கோடுகளின் கலவையை உருவாக்க துடிப்பான தூரிகை வேலைப்பாடுகளையும் பயன்படுத்துகிறார். Tay, அடையாளம் காணக்கூடிய வடிவங்களை முற்றிலுமாக கைவிட்டு, வண்ணப்பூச்சின் பொருள் தொடர்புகளில் கவனம் செலுத்தி, அமைப்பு, இயக்கம் மற்றும் தன்னிச்சையான தன்மை ஆகியவற்றில் தனது ஆர்வத்தை பிரதிபலிக்கிறார். சுருக்கத்தில் அவரது ஆரம்பகால முயற்சிகளில் ஒன்றாக, இது வடிவம் மற்றும் நடுத்தரத்துடன் அவரது வளர்ந்து வரும் பரிசோதனையை வெளிப்படுத்துகிறது. |

**SG2**

## இருப்பு

அடையாளம், மனித ஆன்மா மற்றும் சமூக மாற்றத்தை ஆழ்ந்து ஆராய ஓவியர்கள் நீண்ட காலமாக மனித உடலைப் பயன்படுத்தி வருகின்றனர். சமூகம் மாறியதால், ஓவியர்கள் தங்கள் காலத்தில் வளர்ந்து வரும் அடையாளங்களைப் பிரதிபலிக்கும் வகையில் மனித உருவத்தை எவ்வாறு சித்தரிப்பது என்பதில் தடுமாறினர். ஆழ்ந்த, தனிப்பட்ட தன்னுருவப்படங்கள் மற்றும் சக ஓவியர்கள், நண்பர்களின் நெருக்கமான சித்தரிப்புகள் மூலம், அவர்கள் தங்கள் தலைப்புப்பொருள்களின் இருப்பையும் ஓவியருக்கும் அமருநருக்கும் (sitter) இடையிலான உறவையும் படம்பிடித்தனர், அதே நேரத்தில் தனிப்பட்ட மற்றும் சமூக இயல்புகளையும் ஆராய்ந்தனர். உருவ ஓவியம் வரைதல் புதுமையான பிரதிநிதித்துவத்தையும் படக்கோப்பு அணுகுமுறைகளையும் கையாண்டு, புதிய அழகியல் உணர்வுகளை வெளிப்படுத்தியது. 1950கள் மற்றும் 1960களில் ஓவியக்கலை தொடர்ந்து வளர்ச்சியடைந்ததால், நவீன ஓவியர்களுக்கு உருவப்படமும் நிலைப் பொருள் ஓவியம் அடித்தளமாகவும், வெளிப்பாட்டின் ஒரு முக்கிய முறையாகவும் இருந்தன.

நன்யாங் நுண்கலைக் கழகத்தில் (NAFA), உ ருவ ஓவியம் பௌதிக உலகின் நேரடிப் பிரதிநிதித்துவத்தில் வேரூன்றி, மீண்டும் மீண்டும் உற்றுக்கவனித்து அதன்படி வரையும் அமர்வுகள் மூலம் மெருகூட்டப்பட்டது - இம்முறை கல்வியின் ஒரு மூலக்கல்லாக இருந்தது. போருக்குப் பிந்தைய சிங்கப்பூரில் ஓவியப் பயிற்சிக்கான முக்கிய மையமாக NAFA மாறியது, அங்குத் ஓவியர் தலைமுறைகள், ஜார்ஜெட் சென் (Georgette Chen), சென் வென் இஹ்சி (Chen Wen His), சியோங் சூ பியெங் (Cheong Soo Pieng), சென் சோங் இஸ்வீ (Chen Chong Swee) போன்ற ஆசிரியர்களாகவும் இருந்த செல்வாக்கு மிக்க ஓவியர்களால் வழிநடத்தப்பட்டனர்.

லிம் மு ஹியூ (Lim Mu Hue)
(பிறப்பு 1936, சிங்கப்பூர்; இறப்பு. 2008, சிங்கப்பூர்)
இஃது ஒரு கனவு
1963
கித்தானில் எண்ணெய்
NUS அரும்பொருளகத்தின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம்
S2012-0005-052-0

ஒரு பெண், ஒரு சிகரெட்டைப் பிடித்துக் கொண்டிருக்கையில் நிழலில் இருந்து இரண்டாவது உருவம் வெளிப்படுகிறது. அவளுடைய சிகரெட் புகையிலிருந்து, நம்பிக்கையான எதிர்காலத்தையும் அவளுடைய இருண்ட நிகழ்காலத்தையும் வேறுபடுத்திக் காட்டும் ஒரு தெருக் காட்சி வருகிறது. சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, 1963 இல் வரையப்பட்ட இப்படைப்பு, பதற்றத்திற்கும் நம்பிக்கைக்கும் இடையில் நிலைத்திருக்கும் ஒரு சமூகத்தைக் காட்டுகிறது.

அப்போது நன்யாங் நுண்கலைக் கழகத்தில் ஆசிரியராகவும், 'நன்யாங் சியாங் பாவ்'வின் (Nanyang Siang Pau) ஓவியராகவும் இருந்த லிம், இப்படைப்பில் இயல்பு, பிரதிபலிப்பு என இரண்டையும் முன்வைக்க, கல்வியாளர், சமூகப் பார்வையாளர் எனத் தனது இரட்டை வேடங்களைப் பயன்படுத்தியிருக்கலாம்.

"உங்கள் பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் ஓவியர்களைப் பயிற்றுவித்த போதிலும், ஒவ்வொருவரும் அவரவர் தனித்துவமான பாணியில் ஓவியம் வரைகிறார்கள், ஆசிரியர்கள் தங்கள் சொந்தப் பாணியைக் கற்பிக்க அங்கு இல்லை; ஏனென்றால் ஒரு கழகத்தின் பணி என்பது எப்போதும் வாழ்க்கையிலிருந்தே வரைதல் மற்றும் வண்ணந்தீட்டுதல் ஆகியவற்றுக்கான அடிப்படையையும் மரபு விதிகளையும் மாணவர்களுக்கு வழிகாட்டுவதாக இருக்க வேண்டும்."
ஜார்ஜெட் சென் (Georgette Chen), நன்யாங் நுண்கலைக் கழகத்தின் 1957ஆம் ஆண்டு வகுப்புப்
பட்டமளிப்புவிழாச் சிறுபுத்தகம், 1957.

ஜார்ஜெட் சென் சிங்கப்பூரின் ஓவிய வரலாற்றில் ஒரு முக்கிய நபராகவும், ஷாங்காய், பாரிஸ் மற்றும் நியூயார்க் போன்ற நகரங்களில் பயிற்சி பெற்றவராகவும் உள்ளார். 1954 ஆம் ஆண்டில், நன்யாங் நுண்கலைக் கழகத்தில் அதன் நிறுவன முதல்வர் லிம் ஹக் டாய் (Lim Hak Tai) அவர்களால் ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதலைக் கற்பிக்க அழைக்கப்பட்டார்.

| |
|---|
| சென் தனது வெளிநாட்டுப் பயிற்சியிலிருந்து தான் கற்ற நுட்பங்களைத் தனது மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார், மேலும் ஒருவர் தனது சொந்த ஓவியப் பாணியை வளர்த்துக் கொள்ளும்போது ஒழுக்கத்தையும் பயிற்சியையும் வலியுறுத்தினார். நிலைப்பொருள்-ஓவியங்களைத் தவிர, அவர் வரைந்த உருவப்படங்களுக்காகவும், குறிப்பாக, அவரது வாழ்நாள் தோழியாக மாறிய ஒரு ஓவியரான ரோஹானி இஸ்மாயில் போன்ற அவரது மாணவர்களின் உருவப்பட ஓவியங்களுக்காகவும் அவர் அறியப்படுகிறார். |
| ஜார்ஜெட் சென்<br>(பிறப்பு 1906, சீனா; இறப்பு. 1993, சிங்கப்பூர்)<br>ரோஹானி<br>1963<br>கித்தானில் எண்ணெய்<br>ஓவியரின் பேட்டையின் பரிசு<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு<br>1994-04116<br><br>இவ்வுருவப்படத்தில், நன்யாங் நுண்கலைக் கழகத்தில் ஜார்ஜெட் சென்னின் மாணவியாக இருந்த ரோஹானி இஸ்மாயில் இடம்பெற்றுள்ளார். அமைதியாக நம்பிக்கையுடன் அமர்ந்திருக்கும் அவர், ஒரு சிவப்பு மலர் ஆடையையும் பொருத்தமான தலை முக்காடு அணிந்துள்ளார், அதில் "R" என்ற எழுத்து பொருந்திய மெல்லிய தங்க முள் உள்ளது. ரோஹானியும் சென்னும் நெருங்கிய நண்பர்கள், அவர்கள் அடிக்கடி மலாய் மொழியில் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டனர். அவர்களின் கடிதப் போக்குவரத்து, அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த ஆழ்ந்த பரஸ்பர மரியாதையையும் போற்றுதலையும் பிரதிபலிக்கிறது. |
| "உடலின் அமைப்பு உணர்ச்சி மற்றும் உணர்வின் மிகவும் ஆற்றல்வாய்ந்த சின்னமாகும்; உருவத்தைப் பயன்படுத்துவதில் உள்ள மகத்தான ஆற்றலால் நான் ஈர்க்கப்பட்டேன். இளம் உடலாக இருந்தாலும் சரி, வயதான உடலாக இருந்தாலும் சரி, அஃது இன்னும் ஒரு கதையை உணர்வுநிரம்ப, அதன் பாகங்களுடன் வெளிப்படுத்துகிறது."<br>இங் எங் டெங், இங் எங் டெங்: ஓவியம் மற்றும் எண்ணங்கள், 1998.<br><br>இங் எங் டெங் சிற்பம் செய்தல், மட்பாண்டங்கள் செய்தல், ஓவியம் தீட்டுதல் மற்றும் வரைதல் ஆகியவற்றில் பணியாற்றிய ஒரு சிறந்த கலைஞராக இருந்தார். அவர் தனது முறையான ஓவியப் பயிற்சியை நன்யாங் நுண்கலைக் கழகத்தில் தொடங்கினார், அங்கு அவருக்கு |

| |
|---|
| ஜார்ஜெட் சென் மற்றும் சியோங் சூ பியெங் உள்ளிட்ட மதிப்புமிக்க ஓவியர்கள் கற்பித்தனர். சென்னால் ஊக்குவிக்கப்பட்டு, 1962 முதல் 1964 வரை இங்கிலாந்தில் தொழில்துறை மற்றும் படைப்பக மட்பாண்டவியலில் தனது படிப்பை மேற்கொண்டார். அவரது, உணர்வு வெளிப்பாடுள்ள சிற்பங்கள் மற்றும் மனித வடிவம் மற்றும் நிலையை ஆராயும் சுட்டகளிமண் பொருள்களுக்காக இங் மிகவும் அங்கீகரிக்கப்படுகிறார். |
| இங் எங் டெங்<br>(பிறப்பு 1934, சிங்கப்பூர்; இறப்பு. 2001, சிங்கப்பூர்)<br>உன் பெயர் 'பெண்' II<br>சுமார்  1967<br>அலுமினியஸ் சிமெண் மற்றும் மரம்<br>சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின், NUS அரும்பொருளகத்தின் திரட்டு<br>N1997-0001-287-0<br><br>"உன் பெயர் பெண் II" என்ற ஓவியம் ஓர் அமர்ந்த பெண்ணின் உருவத்தைச் சித்தரிக்கிறது, அப்பெண்ணின் தலை மற்றும் வலது கால் வெளிப்புறமாக புடைப்பின் மேற்பரப்பிற்கு வெளியேயும் நீண்டு அதன் இருப்பை வலுவாகக் காட்டுகிறது. மேற்பரப்பையும் இடத்தையும் புத்திசாலித்தனமாக இணைக்கும் இந்த இணைப்பு, சிற்ப வேலைப்பாடுகள் மீதான இங் எங் டெங்கின் ஆர்வத்தைப் பிரதிபலிக்கிறது. இச்சிற்பத்திற்காக, இங் தொழில்துறை கான்கிரீட்டுக்குப் பயன்படும் அலுமினியஸ் சிமெண்டைப் பயன்படுத்தினார். அவர் 1959 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஓவியர் ஜீன் புல்லாக்கிடமிருந்து இந்நுட்பத்தைக் கற்றுக்கொண்டார், அவருடைய டெரகோட்டா மார்பளவு உருவப்படம் அருகில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. |
| லிம் நாங் செங்<br>(பிறப்பு 1916, மலேசியா; இறப்பு 1987, சிங்கப்பூர்)<br>பசு<br>சுமார் 1960கள்<br>வெண்கலம்<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2021-00005<br><br>"பசு" என்கிற இச்சிற்பம், துன்பத்தின் சக்திவாய்ந்த கதையைச் சொல்கிறது. மெலிந்த மற்றும் ஊட்டச்சத்து குறைப்பாடுள்ள விலங்கு அது தாங்கிய கடுமையான நிலைமைகளை வெளிப்படுத்துகிறது. |

**SG2**

1960களில், ஓவியம் கலை உலகில் ஆதிக்கம் செலுத்தியபோது, லிம் நாங் செங்கும் அவரது சகாக்களும் முப்பரிமாண வடிவங்களை ஆராய்ந்து இயல்பான விஷயங்களைச் சித்தரிக்கத் தொடங்கினர்.

இப்படைப்பின் பின்னணியில் உள்ள காப்புநிலைப் புகைப்படம், 1967 ஆம் ஆண்டு தேசிய நூலகத்தில் நடைபெற்ற சிங்கப்பூரின் முதல் சிற்பக் கண்காட்சியை ஆவணப்படுத்துகிறது, இதில் லிம் மற்றும் ஆவ் எங் குவாங் போன்ற கலைஞர்கள் இடம்பெற்றிருந்தனர் - இது சிற்பப் பணிகளை பொது உரையாடலுக்குக் கொண்டு வந்த ஒரு மாற்றமான தருணம்.

**SG2**

## வடிவத்தையும் நிறத்தையும் விடுவித்தல்

1960களில் இருந்து, சர்வதேச அளவில் ஓவியக்கலையில் ஏற்பட்ட வளர்ச்சிகளுடன் இணைந்து.சிங்கப்பூரிலும் ஓவியம் பற்றிய புதிய சிந்தனை வழிகள் தோன்றின. பயணம், சர்வதேச ஓவிய வெளியீடுகள் அல்லது வெளிநாட்டு ஆய்வுகளில் பங்கேற்றது மூலம் பல இளம் ஓவியர்கள் புதிய கண்ணோட்டங்களைப் பெற்றனர். நவீன ஓவியச் சங்கத்தின் உறுப்பினர்கள், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் மாறிவரும் புவிசார் அரசியல் அலைகளால் வடிவமைக்கப்பட்ட, மாறிவரும் இயல்புகளைப் பிரதிபலிக்கக்கூடிய புதிய ஓவிய மொழிகளுக்காக வாதிட்டனர். 1962 ஆம் ஆண்டில், மலாய் கலைஞர்களை ஆதரிப்பதற்காக 'அங்கத்தான் பெலுகிஸ் அனேகா தயா' (பல்வேறு மூலங்களின் ஓவியர்கள் சங்கம்) நிறுவப்பட்டது. சிங்கப்பூரிலும் வட்டாரத்திலும் கண்காட்சிகள், ஓவிய வகுப்புகள் மற்றும் ஒத்துழைப்புகளை ஏற்பாடு செய்வதில் தீவிரமாக ஈடுபட்டது. தேசிய, வட்டார மற்றும் சர்வதேசக் கண்ணோட்டங்களின் ஒன்றிணைதல் அவர்களின் காட்சி உணர்வுகளில் படைப்புச் சுதந்திரத்தின் ஊற்றுக்கண்ணாக மாறியது.

கதைவடிவ உள்ளடக்கத்தை நம்புவதற்குப் பதிலாக, ஓவியர்கள், கோடு, வடிவம் மற்றும் நிறம் போன்ற படக்கோப்புக் கூறுகள் போன்ற உருவத்தின் அம்சங்கள் பொருள்பொதிந்த (meaningful) கூறுகளாக எப்படி மாறமுடியும் என்பதையும், காட்சியுணர்வை அளிக்கும் அதே நேரத்தில் பொருள்விளக்கத்தைத் தொடர்புகொள்வது எப்படி என்பதையும் ஆராய்ந்தனர். அவர்கள் வண்ணம், தூரிகை வேலைப்பாடு மற்றும் அன்றாடப் பொருள்களைப் பயன்படுத்தி நல்லிணக்கம், உணர்ச்சி, ஆன்மீகம் மற்றும் அண்டம் போன்ற கருத்துகளை வெளிப்படுத்தினர். மற்றவர்கள் பாடிக் (Batik) போன்ற மரபுக் கலை வடிவங்களில் புதுமைகளை உருவாக்கி, மரபுக்கும் நவீனத்திற்கும் இடையிலான இறுக்கங்களை வெளிப்படுத்தினர். இக்காலக்கட்டத்தில் ஏற்பட்ட ஏராளமான கலை மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றங்கள், பல்வேறு பாணியியல் அணுகுமுறைகளுக்கு வழிவகுத்தன.

**SG2**

சென் வென் இஹ்சி (Chen Wen Hsi)
(பிறப்பு 1906, சீனா; இறப்பு 1991, சிங்கப்பூர்)
5 கிங்ஸ்மீட் சாலையில் உள்ள சென் வென் இஹ்சியின் (Chen Wen His) சுவரோவியங்கள் பற்றியது
2025
காணொளி, ஒற்றை-ஒளிவழி, 4:3 தோற்ற விகிதம், நிறம் மற்றும் ஒலி (ஸ்டீரியோ), 5 நிமிடம் 35 வினாடிகள்
சிங்கப்பூர் தேசிய கலைக்கூட நூலகம் & காப்பகத்தின் திரட்டு

சென் வென் இஹ்சி, புக்கிட் திமாவின் 5 கிங்ஸ்மீட் சாலையில் உள்ள தனது வீட்டில் இடத்தடையாளமாக (landmark) விளங்கும் இரண்டு சுருக்கவியல் சுவரோவியங்களை உருவாக்கினார், அங்கு அவர் 1955 முதல் 1991 வரை வசித்து வந்தார். இரண்டில் பெரியது, 'படைப்பகம்' (studio) என்று பெயரிடப்பட்டுள்ளது, முன் தாழ்வாரத்தில் ஒரு நோக்கத்திற்காக கட்டப்பட்ட சுவரில் அவ்வோவியம் விரிந்துள்ளது; இரண்டாவது ஓவியம் பின்புறத்தில் தோன்றும். இரண்டு படைப்புகளும் வடிவியல் தளங்கள் மற்றும் துண்டு துண்டான படக்கோப்புகள் மீதான சென்னின் துணிச்சலான ஆய்வுமுயற்சியைப் பிரதிபலிக்கின்றன, அவை ஓவியத்தின் பாரம்பரிய வகைகளான நிலப்பரப்புகள், உடையிலி உடல்கள் (naked) மற்றும் நிலைப்பொருள் ஓவிய (still life) வகைகளுக்கு அறைகூவல் விடுத்தன. காலப்போக்கில் இப்படைப்புகள் மோசமடைந்துவிட்டாலும், அவை மிகவும் உன்னிப்பாக மீட்டெடுக்கப்பட்டு, அவரது ஓவிய மரபின் ஒரு முக்கிய அம்சம் பாதுகாக்கப்பட்டு, மரபான ஊடகங்களுக்கு அப்பாற்பட்ட அவரது ஆய்வுகள் பற்றிய நுண்ணறிவை அவை வழங்குகின்றன.

"எனக்கு, படக்கோவை (collage) என்பது தூரிகையின் கொடுங்கோன்மையிலிருந்து விடுதலை தருவது. இது செயல்பாட்டு முறைகளில் ஒரு குறிப்பிடத்தக்க இயற்பியல் கூறுகளைச் செலுத்துகிறது. இந்த வெளிப்புற பொருள்களின் செயற்பண்புகளை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்."
தாமஸ் இயோ (Thomas Yeo), தாமஸ் இயோ: ஒரு பின்னோக்கிய பார்வை, 1997.

ஒரு தலைசிறந்த வண்ணக் கலைஞராகக் (colourist) கருதப்படும் தாமஸ் இயோ, தனது ஓவியங்கள் மற்றும் படக்கோவைகளுக்குப் (collages) பெயர் பெற்றவர், அவை பெரும்பாலும் கரிம வடிவங்கள், நிலப்பரப்புகள் மற்றும் கற்பனை இடங்களைச் சித்தரிக்கின்றன. அவர் நன்யாங் நுண்கலைக் கழகத்தில் பயிற்சி பெற்றார், பின்னர் லண்டனில் உள்ள செல்சி (Chelsea) ஓவியப் பள்ளி மற்றும்

ஹேமர்ஸ்மித் (Hammersmith) ஓவியக்கலை மற்றும் கட்டடக்கலை கல்லூரியில் தனது படிப்பை மேற்கொண்டார், அங்கு அவர் நகரத்தின் ஓவியச் சூழலில் தன்னை மூழ்கடித்துக் கொண்டார். 1980களில் சிங்கப்பூருக்குத் திரும்பிய இயோ, எண்ணெய், அக்ரிலிக், கோவாச் (gouache), காகிதம் மற்றும் உலோகம் உள்ளிட்ட பல்வேறு வகையான ஊடகங்களில் தொடர்ந்து ஆய்வுமுயற்சிகளைச் செய்தார். அவரது படைப்புகள் இயற்கை மற்றும் நிலப்பரப்புகளின் மையக்கருத்துகளிலிருந்து வேறுபட்டு, பெரும்பாலும் உயர்ந்த பார்வை கோணத்திலிருந்து பார்க்கப்படுகின்றன.

தாமஸ் இயோ (Thomas Yeo)
(பிறப்பு 1936, சிங்கப்பூர்)
மஞ்சள் சவாரியாளர்
1967
கித்தானில் அக்ரிலிக்
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு
2020-00351

பாவ்லோ உசெல்லோவின் (Paolo Uccello) சான் ரோமானோ போர் (*San Romano)* (சுமார் 1438–1440) மூலம் ஈர்க்கப்பட்ட 'மஞ்சள் சவாரியாளர்', தாமஸ் இயோ பிரதிநிதித்துவப் பாணியிலிருந்து சுருக்கவியல் பாணிக்கு மாறுவதைக் குறிக்கிறது. தெளிவான விவரிப்புக்குப் பதிலாக, இயோ, உருவைத் தூய நிறமாகவும் வடிவமாகவும் வடிக்கிறார். இரண்டு வெள்ளை நீள்வட்டங்கள் குதிரைச் சவாரி செய்பவர்களைக் குறிக்கின்றன, அவர்களின் உருவங்கள் கடுகு நிறத் தரையிலும் துடிப்பான வண்ணக்கூட்டங்களிலும் கரைகின்றன. ஒரு குதிரை தனித்துவமான வரையறைகள் வழியாக இல்லாமல், மாறாக நீர்மமான, ஒன்றோடொன்று இணைந்த வடிவங்கள் வழியாக வெளிப்படுகிறது. இங்கே, இயோ போரின் குழப்பத்தை வடிவங்கள் மற்றும் வண்ணங்களின் இடைப்பின்னல் வழியாக மறுகற்பனை செய்கிறார், வெறுமனே காட்சியைக் கவனிப்பதற்குப் பதிலாக அக்காட்சியை அனுபவிக்கும்படியாகப் பார்வையாளர்களை அழைக்கிறார்.

(1960களுக்குப் பிறகு, புதுமையாக இருப்பது என்பது அனைத்து உருவப்படுத்தலையும், ஏற்கனவே உள்ள ஓவிய நுட்பங்களையும் கைவிடுவதாகும் என்பதை உணர்ந்தேன். வேறு யாரும் நடக்க முடியாத பகுதிகளை நோக்கி நான் நகரும்போதுதான், உருவப்படுத்தலில் இருந்து என்னை விடுவித்து, சுருக்கத்தின் எல்லைக்குள் சுதந்திரமாக முன்னேற முடியும்.)
ஹோ ஹோ யிங் (Ho Ho Ying), என் ஓவியங்கள், 1978.

ஹோ ஹோ யிங் ஓர் ஓவியர், எழுத்தாளர் மற்றும் ஓவியத் திறனாய்வுரைநர் (critic) ஆவார், அவர் தனது வெளிப்படையான சுருக்கவியல் மற்றும் அழகெழுத்துக்குப் பெயர் பெற்றவர். தாமாகக் கற்றுக் கொண்ட ஓவியரான அவர், உள்ளூர் ஓவியத்தில் புதுமைகளை ஆதரித்து நவீன ஓவியத்துக்கான சங்கத்தை இணைந்து நிறுவினார். சீனப் பண்பாடு, தத்துவம், அழகெழுத்து மற்றும் மேற்கத்திய சுருக்கவியல் முதலியவற்றிலிருந்து வரைந்து, 1970 களில் தனக்கென தனித்துவமான வண்ணப்பூச்சு-சொட்டுதல் (paint-dripping) நுட்பத்தை உருவாக்கினார்.

ஹோ ஹோ யிங் (Ho Ho Ying)
(பிறப்பு 1936, சீனா; இறப்பு 2022, சிங்கப்பூர்)
படக்கோப்பு
1974
மேசனைட் (Masonite) பலகையில் அக்ரிலிக்
ஓவியரின் பரிசு
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு P-0249

'படக்கோப்பு' எனும் இப்படைப்பு, தடித்த வண்ணத் தொகுதிகளையும் அடுக்கு அடுக்கான வண்ணப்பூச்சுச் சொட்டுகளின் மாறும் இடைப்பின்னலைக் கொண்டுள்ளது. ஹோ ஹோ யிங் பெரும்பாலும் தரையில் தட்டையாக வைக்கப்பட்ட ஊடங்களின் மீது தனது ஓவியங்களை வரைந்தார், சுதந்திரமாகப் பாயும் வண்ணப்பூச்சின் இயற்கையான இயக்கத்தை வழிநடத்த அவற்றை சாய்த்து நிமிர்த்தி மறுநிலைப்படுத்தினார். இத்தகைய செயல்முறை சார்ந்த அணுகுமுறை அமெரிக்கச் சுருக்க வெளிப்பாட்டியலின் தன்னியல்பால் ஈர்க்கப்பட்டது, இஃது ஓவியம் என்பது மீண்டும் மீண்டும் செய்ய முடியாத தற்கண்டுபிடிப்புச் செயல் என்ற ஹோவின் நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது. ஒவ்வொரு சைகையும், உள்ளுணர்வும், கட்டுப்பாடற்ற தன்மையும், உட்பண்பு மற்றும் ஆய்வின் ஒரு தருணத்தைப் படம்பிடிக்கிறது.

"எனது வண்ணங்கள் எனது சூழலை வெளிப்படுத்துகின்றன. நீங்கள் அவற்றைப் பார்த்தால், அவை சிங்கப்பூரின் வண்ணங்கள் என்பதை நீங்கள் காண்பீர்கள் [...] எனது சூழல் நெருக்கடியானது மற்றும் நகர்ப்புறமானது. நான் வேறு எங்காவது வாழ்ந்திருந்தால் நான் வேறுவகையில் வரைவேன்."
கோ பெங் குவான் (Goh Beng Kwan), கோ பெங் குவானின் ஓராள்-காட்சி, 1977.

**SG2**

| |
|---|
| கோ பெங் குவானின் பயிற்சியானது இடம், பொருள் ஆகிய இரண்டிலும் வேரூன்றியுள்ளது. அவர் சீன உயர்நிலைப் பள்ளியில் சென் வென் இஹ்சி (Chen Wen His) மற்றும் சியோங் சூ பியெங்கின் (Cheong Soo Pieng) கீழ் ஓவியம் பயின்றார், பின்னர் அமெரிக்காவில் தனது ஓவியக் கல்வியைத் தொடர்ந்தார், அங்கு அவர் 1960களில் அமெரிக்கச் சுருக்க வெளிப்பாட்டியல் மற்றும் படக்கோவை (collage) ஆகிய இரண்டிலும் ஈடுபட்டார். இவ்வெளிப்பாடு அவரது தனித்துவமான ஓவியப் பாணியை வடிவமைத்தது, இது சீன அழகெழுத்தின் துணைக்கோட்டடிப்புகளைச் (stroke) சுருக்கவியலுடன் இணைக்கிறது. |
| கோ பெங் குவான் (Goh Beng Kwan)<br>(பிறப்பு 1937, இந்தோனேசியா)<br>கறுப்பு நண்பகல்<br>1963<br>கித்தானில் அக்ரிலிக்<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 1993-01394<br><br>1963 ஆம் ஆண்டு அதிபர் ஜான் எஃப். கென்னடியின் (John F. Kennedy) படுகொலைக்குப் பதிலளிக்கும் விதமாக கோ பெங் குவான் (Goh Beng Kwan) கறுப்பு நண்பகலை உருவாக்கினார். இத்துயரமான, வரலாற்று நிகழ்வுக்குப் பதிலளிக்கும் விதமாக அதன் இருண்ட வண்ணங்களும் வெளிப்படையான தூரிகைத் தடவல்களும் துக்கத்தையும் வேதனையையும் வெளிப்படுத்துகின்றன. அந்நேரத்தில் நியூயார்க்கில் ஒரு மாணவராக இருந்தபோது, கோவின் ஓவிய அணுகுமுறை அமெரிக்கச் சுருக்க வெளிப்பாட்டியலின் தாக்கம் பெற்றது - அமெரிக்கச் சுருக்க வெளிப்பாட்டியல் அதன் சைகைத் தூரிகை அசைவுகள் (gestural brushstrokes), வண்ணத்தின் ஆற்றல்மிக்க புலங்கள் மற்றும் தன்னியல்புத் தன்மைக்குப் பெயர் பெற்ற இயக்கம். |
| கோ பெங் குவான் (Goh Beng Kwan)<br>(பிறப்பு 1937, இந்தோனேசியா)<br>மேல்<br>கிரேத்தா ஆயரை நகர்ப்புறமாகப் புதுப்பித்தல்<br>1986<br>வீட்டு வண்ணப்பூச்சு, அரிசிக் காகிதம், பலகை மீது வைக்கப்பட்ட கித்தானில் மையும் பசையும்<br><br>கீழே<br>புவியிடப்பலன் கணிப்பு |

**SG2**

| |
|---|
| சுமார் 1980கள்<br>வீட்டு வண்ணப்பூச்சு, மை, சீனத் தேநீரைச் சுற்றி உறையிடும் காகிதம், அரிசிக் காகிதம், அலங்காரக் காகிதம், துணி, சரடு, மண், மெழுகு மற்றும் கித்தானில் பசை<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு<br>2010-03472 \| 2003-00226<br><br>கிரேத்தா ஆயரை நகர்ப்புறமாகப் புதுப்பித்தல், புவியிடப்பலன் கணிப்பு ஆகிய இரண்டு படைப்புகளும் கோ பெங் குவானின் (Goh Beng Kwan) புதுமையான கோவை (collage) நுட்பங்களையும், 1980களில் சிங்கப்பூரின் வளர்ந்து வரும் நகர்ப்புற மற்றும் பண்பாட்டு மாற்றங்களுடனான அவரது ஈடுபாட்டையும் வெளிப்படுத்துகிறது. கிரேத்தா ஆயரை நகர்ப்புறமாகப் புதுப்பித்தலில், கோ (Goh) சைனாடவுனை மேலிருந்து கீழ் நோக்கி மறு-பொருள்விளக்கம் செய்கிறார், மயக்கும் சீர்வடிவப்படிகளையும் (pattern) அடர் வண்ணங்களையும் பயன்படுத்தி அதன் விரைவான பரிணாம வளர்ச்சியைப் படம்பிடிக்கிறார். நடந்து வரும் நகர்ப்புற மறுவளர்ச்சித் திட்டங்கள் மற்றும் பாரம்பரியப் பகுதிகள் அதிகமாக வணிகமயமாக்கப்பட்டுவிடும் என்று மக்களிடையே வளர்ந்து வரும் அச்சங்களுக்கு இப்படைப்பு பதிலளித்தது. புவியிடப்பலன் கணிப்பு என்ற படைப்பு சீன அண்டவியலுக்குத் திரும்பி, சடங்கு மற்றும் நம்பிக்கை சமூக வாழ்க்கை, நகர்ப்புற வடிவம் மற்றும் பண்பாட்டை எவ்வாறு பாதிக்கிறது என்பதை ஆராய்கிறது. ஒரு மேலாதிக்க வட்ட வடிவம், சரடு மூலம் நான்கு நாண்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது, இது 'ஃபெங் ஷுயி'யில் (feng shui) பயன்படுத்தப்படும் லூபன் (luopan) திசைக்காட்டியைக் குறிக்கிறது - இஃது ஓர் வகையான கணிப்பு மற்றும் ஆற்றல் ஓட்டத்தின் (குயி) அடிப்படையில் இடத்தை ஒழுங்கமைப்பதற்கான ஓர் அமைப்பு. ஒரு சின்னத்தை விட, இஃது ஓர் தொகுப்புக் கருவியாகச் செயல்படுகிறது, இது படைப்புக்குச் சமநிலை மற்றும் ஓட்ட உணர்வை அளிக்கிறது. |
| "ஓவியம் வரைவது போலவே கவிதைகள் எழுதுவது என்பது இடை-இழைவு அமைப்புள்ள சொற்கள் மீது தூரிகை தடவுவதாகும்." லின் இஹ்சின் இஹ்சின் (Lin Hsin Hsin), 'BYTES We Travel'-இல், 1997.<br><br>லின் ஹ்சின் இஹ்சின் ஓர் ஓவியர், மின்னிலக்க ஊடகக் கலைஞர், கவிஞர், இசையமைப்பாளர் மற்றும் தகவல் தொழில்நுட்பத் தொலைநோக்கு பார்வையாளர் ஆவார். ஊடகக் கருவிகள் மற்றும் நுட்பங்களில் தனது தொடக்ககால முயற்சிகளுக்கு மிகவும் பிரபலமானவர். கணிதம் மற்றும் கணினி அறிவியலில் கல்விப் பயிற்சியுடன், இசையில் முறையான சான்றிதழையும் பெற்றதோடு, அவர் லியு காங் (Liu Kang) மற்றும் சியோங் சூ பியெங்கின் (Cheong Soo Pieng) கீழும் பயின்றார். இதன் விளைவாக, லின்னின் (Lin) |

| |
|---|
| கலைப்படைப்புகளும் எழுத்தும் கணினிகள் மற்றும் தொழில்நுட்பம் குறித்த அவரது அறிவையும், திறமையையும் வெளிப்படுத்துகின்றன, மேலும் இயற்கை, சமூக மற்றும் தொழில்நுட்ப நிகழ்வுகள் குறித்த அவரது கணிப்புகளை மெய்ப்பிக்கின்றன, இது சிங்கப்பூரின் விடுதலைக்குப் பிந்தைய ஓவியச் சூழலில் அவரை ஒரு தனித்துவமான ஆற்றலாக்குகிறது. |
| லின் இஹ்சின் இஹ்சின் (Lin Hsin Hsin)<br>(பிறப்பு 1952, சிங்கப்பூர்)<br>கட்டட வடிவமைப்புக் கலைஞராக ஒரு கணினி<br>1977<br>கித்தானில் எண்ணெய்<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2021-00530<br><br>1970கள் மற்றும் 1980களில், லின் இஹ்சின் இஹ்சின் தனது மிகவும் சுருக்கமான ஓவியங்களில் கணினியை ஒரு மையக் கருப்பொருளாக மாற்றினார். தன்னைச் சுற்றியுள்ள உலகில் அதன் வளர்ந்து வரும் இருப்பை அவர் அங்கீகரித்தார். 'கட்டட வடிவமைப்பாளராகக் கணிணி' என்ற புத்தகத்தில், கணினி உதவி வடிவமைப்பு (CAD) கட்டடக்கலையையும் பொறியியலையும் எவ்வாறு மாற்றும் என்பதை அவர் கற்பனை செய்கிறார். நகரமயமாக்கலில் மின்னிலக்கத் தொழில்நுட்பத்தின் அதிகரித்து வரும் பங்கை லின் தனது பணியின் மூலம் முன்னறிவித்தார். |
| "நான் ஒரு தூரிகையை எடுத்தால், வேகம் அல்லது ஒற்றைத்தன்மையை என்னால் பிரதிபலிக்க முடியும். நான் ஒரு வேகமான தூரிகையடியைப் பயன்படுத்தினால், காலத்தை எதிர்த்துப் போராடும் நேரத்தை என்னால் காட்ட முடியும். கோடு உலகளாவியது, ஆனால் மக்கள் இதைப் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறார்கள். வாழ்க்கையில் எனது காட்சி அனுபவமாகவும், எனது உள் நிலப்பரப்பாகவும் இருக்கும் வண்ணங்களை நான் உருவாக்குகிறேன்."<br>ஜாபர் லத்தீஃப் (Jaafar Latiff), தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், 1985.<br><br>தென்கிழக்கு ஆசிய மரபில் ஆழமாக வேரூன்றிய ஓர் ஊடகமான பாடிக்கிற்கான (Batik) புதுமையான அணுகுமுறைக்கு பெயர் பெற்ற ஓவியர் ஜாஃபர் லத்தீஃப் ஆவார். மரபான கைவினைப்பொருளாக பரவலாகக் கருதப்பட்டாலும், பாடிக்கை (Batik) ஓவிய வெளிப்பாட்டின் ஒரு துடிப்புள்ள வடிவமாக ஜாஃபர் மாற்றினார். அவரது படைப்புகளில், இயக்கம், உணர்ச்சி மற்றும் சீரளவுமுறையைத் தூண்டும் கரிம உருவங்கள் மற்றும் வடிவங்கள் |

| |
|---|
| போன்ற அற்புதமான வண்ணங்கள் முக்கியமாக இடம்பெறுகின்றன. தனது பயிற்சிக்கு அப்பால், ஜாஃபர் பஹாருதீன் தொழிற்கல்வி நிறுவனம், லாசால் கலைக் கல்லூரி மற்றும் நன்யாங் நுண்கலைக் கழகம் ஆகியவற்றில் ஓவியம், வடிவமைப்பு மற்றும் புதிய ஊடகப் பாடங்களைக் கற்பித்தார். |
| ஜாஃபர் லத்தீஃப் (Jaafar Latiff)<br>(பிறப்பு 1937, சிங்கப்பூர்; இறப்பு. 2007, சிங்கப்பூர்)<br>பார்வை 1/86<br>1986<br>கித்தானில் அக்ரிலிக்<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு P-0954<br><br>விஷன் 1/86-இல், தடித்த வண்ண ஓடைகளும் வண்ணப்பாய்வுகளும், வளைந்த வடிவங்களும் கித்தானை நிரப்புகின்றன, இஃது ஆற்றலையும் இயக்க உணர்வையும் வெளிப்படுத்துகிறது. 1960களில் பாடிக் (Batik) ஓவியத்தில் தொடங்கிய ஜாஃபர் லத்தீஃப், 1970கள் முதல் 1980கள் வரை அக்ரிலிக் ஓவியத்திற்குத் திரும்பினார். இம்மாற்றம் அவரை மேலும் விரைவாக வேலை செய்ய அனுமதித்தது. பாடிக்கில் அவர் பயன்படுத்திய மையக்கருத்துகள் மற்றும் சீரளவுமுறைகளை இப்புதிய ஊடகத்தில் கொண்டு சென்றார், வண்ணங்களில் கூர்மையான வேறுபாடுகளுக்கு அக்ரிலிக்கின் திறனைப் பயன்படுத்தினார், இது கித்தான் முழுவதும் வண்ணங்களின் இடைவெளியில் தெளிவாகத் தெரிகிறது. |
| "நான் என் கவிதைகளிலிருக்கும் அதே உணர்வை என் ஓவியங்களுக்கும் மாற்றுகிறேன்."<br>அப்துல் கானி ஹமீத் (Abdul Ghani Hamid), தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், 1999.<br><br>எழுத்தாளர், கவிஞர் மற்றும் ஓவியரான அப்துல் கனி ஹமீத் தனது படைப்புத் துறைகளுக்கு இடையில் எந்த எல்லைகளையும் காணவில்லை. அவரைப் பொறுத்தவரைக்கும், கலையும் இலக்கியமும் ஆழமாக இணைக்கப்பட்டிருந்தன. 1962 ஆம் ஆண்டில், கண்காட்சிகள், நிகழ்ச்சிகள் மற்றும் ஓவிய வகுப்புகள் மூலம் மலாய் ஓவியர்களை ஆதரித்த ஒரு கூட்டு நிறுவனமான 'அங்கத்தான் பெலுகிஸ் அனேகா தயாவை (Angkatan Pelukis Aneka Daya) (பல்வேறு மூலங்களின் ஓவியர்கள் சங்கம்) இணைந்து நிறுவினார். போருக்குப் பிந்தைய சிங்கப்பூரின் முதல் இலக்கிய இயக்கமான அங்கத்தான் சாஸ்டெரவான் '50-இன் (Angkatan Sasterawan '50) ('50களின் மலாய் இலக்கிய இயக்கம்) உறுப்பினராகவும் அப்துல் கானி ஹமீத் இருந்தார். அவரது கவிதை, கட்டுரைகள், நாடகங்கள் மற்றும் ஓவிய திறனாய்வுரைகள், பெரும்பாலும் மலாய் மொழியில் |

| |
|---|
| வெளியிடப்பட்டன, பண்பாடு, அடையாளம் மற்றும் ஓவிய வெளிப்பாடு ஆகியவற்றின் கருப்பொருள்களை ஆராய்ந்தன. 1950கள் மற்றும் 1970களில் மலாய்மொழிப் பத்திரிகையான ஹிபோரான் (*Hiboran)* மற்றும் ஞாயிற்றுக்கிழமை செய்தித்தாளான பெரிட்டா மிங்கு (*Berita Minggu)* ஆகியவற்றில் புனைப்பெயர்களில் கேலிச்சித்திரங்களையும் நையாண்டியான கோட்டுப்படங்களையும் அவர் வரைந்தார். |
| அப்துல் கனி ஹமீது (Abdul Ghani Hamid)<br>(பிறப்பு 1933, சிங்கப்பூர்; இறப்பு 2014, சிங்கப்பூர்)<br>இடது<br>காலை நறுமணம்<br>1995<br>காகித வெட்டுருவங்கள் மற்றும் காகிதத்தில் மை<br><br>வலது<br>ஆர்ட் ஜங்ஷன், 1995<br>1995<br>செய்தித்தாள், காகித வெட்டுருவங்கள், புகைப்படம் மற்றும் காகிதத்தில் மை<br>சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் திரட்டு<br>2001-03739 \| 2001-03738<br><br>அப்துல் கானி ஹமீதின் (Abdul Ghani Hamid) இப்படக்கோவைகள் அவரது ஓவிய மற்றும் இலக்கிய நோக்கங்களுக்கு இடையிலான மாறும் உறவை பிரதிபலிக்கின்றன. ‘காலை நறுமணம்’ ஓவியத்தில், 1970களில் அவர் எழுதிய கவிதைகளை இயற்கையின் மையக்கருக்களுடன் இணைத்துப் பின்னுகிறார். 1995 ஆம் ஆண்டு வெளியான 'ஆர்ட் ஜங்ஷன்', அவர் உட்பட சக ஓவியர்களின் புகைப்படங்களை, அவர்கள் எழுதிய அல்லது அவர்கள் இடம்பெற்ற செய்தித்தாள் கட்டுரைகளுடன் இணைத்து, மிகவும் தனிப்பட்ட முறையிலான கதையை வழங்கியது. ஒன்றாக, இப்படைப்புகள் பார்வையாளர்களை அவரது படைப்பு வாழ்க்கை உலகத்திற்கு அழைத்துச் செல்கின்றன, அங்கு வார்த்தைகளும் படங்களும் ஒன்றோடொன்று உரையாடி இணைகின்றன. |
| தேஹ் டியென் சோங் (Teh Tien Chong)<br>(பிறப்பு 1939, மலேசியா; இறப்பு. தெரியவில்லை, நியூசிலாந்து)<br>அண்டத் தடைகள்<br>1980<br>செயற்கை வண்ணப்பூச்சு, கித்தான் மற்றும் மரம் |

**SG2**

| |
|---|
| ஓவியரின் பரிசு<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு ASB-0017<br><br>'அண்டத் தடைகள்' (*Cosmic Barriers)* படைப்பு, சீர்வடிவப்படிகளையும் பாயும் அலை போன்ற வடிவங்களையும் பல பலகைகளில் பரப்பி, மரபான கித்தானின் எல்லைகளை நீட்டிக்கின்றது, அறிவியல் புனைக்கதை மற்றும் விண்வெளிப் பந்தயத்தால் ஈர்க்கப்பட்டு, தே தியென் சோங் (Teh Tien Chong), இடம் மற்றும் காலத்தின் சுருக்கக் கருத்துகளை ஒரு பௌதிக ஊடகமாக மொழிபெயர்க்கிறார். புடைப்பு நுட்பங்களைப் பயன்படுத்தி, அவர் முப்பரிமாண விளைவுகளை உருவாக்கி, தனது ஓவியத்துக்குச் சிற்பம் போன்ற தரத்தைக் கொடுக்கிறார். அவ்வாறு செய்வதன் மூலம், ஓவியம் எங்கு முடிகிறது, சிற்பம் எங்குத் தொடங்குகிறது என்பதை அவர் மறுபரிசீலனை செய்கிறார். |
| சோங் ஃபா சியோங் (Chong Fah Cheong)<br>(பிறப்பு 1946, சிங்கப்பூர்)<br>குடும்பமும் ஒருவரும்<br>1985<br>தேக்கு மற்றும் ரம்புட்டான் மரத்தின் கிளை<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு<br>ASB-0081<br><br>ஐந்து செதுக்கப்பட்ட மரப் பலகைகள் ஒன்றோடொன்று ஒட்டி நிற்கின்றன, ஒவ்வொன்றும் மென்மையான ஆனால் உறுதியான சமநிலையில் அடுத்ததைத் தாங்குகின்றன. உள்ளே இருக்கும் இடம் அவற்றின் இணைப்பால் ஒன்றிணைக்கப்பட்டு, தழுவியிருப்பதாக உணர்கிறது. முதலில் குடும்பம் என்று பெயரிடப்பட்ட இச்சிற்பத்தை, சோங் ஃபா சியோங் (Chong Fah Cheong), ஐந்தாவது பலகையைச் சேர்ப்பதன் மூலம் 'குடும்பமும் ஒருவரும' என மாறும்படி மறுவேலை செய்தார் - அதன் வட்டமான விளிம்புகள் மற்றும் கரிம வடிவம் குடும்பம் பற்றிய விரிவாக்கப்பட்ட கருத்தைப் பரிந்துரைக்கிறது. ஒரு பீடத்தில் வைக்காமல், நேரடியாகத் தரையில் படைப்பை வைப்பதன் மூலம், சோங் தனது சிற்பம் தருகிற உடனடிப் பௌதிக அனுபவத்தைப் பெற அழைக்கிறார். |

**SG2**

## புதியவற்றின் திசையன்கள்

புதிய ஓவிய வடிவங்கள் எப்படி இருக்கும்?

1970களில் நவீன ஓவியம் வளர்ச்சியடைந்ததால், ஓவியர்கள் ஓவியத்தின் பௌதிக வடிவம் மற்றும் பொருட்பண்புகளை ஆய்வு செய்தனர். புதிதாகக் கிடைத்த தொழில்துறை தொழில்நுட்பங்களையும், பிளாஸ்டிக், எஃகு மற்றும் துணி போன்ற பொருள்களையும் அவர்கள் திரட்டி, ஓவியம் மற்றும் சிற்பம் எவ்வாறு உருவாகலாம், எப்படி இருக்கும் என்பதை மறுவரையறை செய்தனர். ஒளி, நிறம் மற்றும் சீரளவுமுறை ஆகியவை பார்வையாளரின் கலை உணர்வையும் அனுபவத்தையும் மாற்றியமைத்த முக்கியக் கூறுகளாக மாற்றின. சிங்கப்பூரில் முன்னோடி ஓவியர்களால் நடத்தப்படும் இடமான ஆல்பா கலைக்கூடத்துடன் தொடர்புடைய ஓவியர்கள், ஓவியத்துக்கான புதுமையான அணுகுமுறைகளை மேம்படுத்தினர் மற்றும் சர்வதேச இயக்கங்களுடன் திறனாய்வு அடிப்படையில் ஈடுபட்டனர்.

இக்காலகட்டத்தில் புகைப்படம் எடுத்தல், மட்பாண்டங்கள் செய்தல், அச்சுக்கலை, மை மற்றும் சிற்பம் போன்ற பிற ஊடகங்களிலும் குறிப்பிடத்தக்க கலைப் புதுமைகள் காணப்பட்டன. "புதுமை" என்ற நவீனத்துவ நெறிமுறைகளைத் தழுவி, ஓவியர்கள் சமகாலச் சூழல்களைப் பிரதிபலிக்கும் வகையில் அவர்கள் தேர்ந்தெடுத்த ஊடகங்களின் சாத்தியக்கூறுகளை விரிவுபடுத்தினர். வடிவம், பொருளின் தன்மை, தன்வெளிப்பாடு, இயல்பு, மரபு மற்றும் புதுமைக்கு இடையிலான இறுக்கங்கள் பற்றிய கேள்விகளை அவர்கள் கையாண்டனர். சிலர் வணிக மற்றும் வரைகலை வடிவமைப்பில் துணிந்து இறங்கினர், இஃது அக்காலத்தின் பல்துறை நெறிமுறைகளையும் ஓவியத்துக்கும் தொழில்துறைக்கும் இடையிலான ஆழமான சிக்கல்களையும் பிரதிபலிக்கிறது.

**SG2**

டான் இஸ்வீ ஹியான் (Tan Swie Hian)
(பிறப்பு 1943, இந்தோனேசியா)
ஒரு மலர்க் கடலின் மாயை, அல்லது ஒரு புதிய கோரமான கற்களின் படக்கோப்பு
1982
அரிசிக் காகிதத்தில் சீன மை மற்றும் நீர் வண்ணம்
YLY திரட்டின் பரிசு
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு

அதன் மர்மமான வடிவங்களுடன், இப்படைப்பு பல விளக்கங்களை வரவேற்கிறது - அவை கற்களா அல்லது தலைப்பில் குறிப்பிடுவது போல "மலர் கடலா"?
இத்தெளிவின்மை, டான் இஸ்வீ ஹியானின் (Tan Swie Hian) பௌத்த தத்துவத்துடனான ஈடுபாட்டைப் பிரதிபலிக்கிறது, அங்கு, கருத்து நிலையற்றது, நீர்ம வடிவமுடையது மற்றும் அகநிலை சார்ந்தது என்று பார்க்கப்படுகிறது. தாமாகக் கற்றுக் கொண்ட ஓவியரான டான், ஓவியம், சிற்பம், நிகழ்த்துகலை, மொழியியல், எழுத்து மற்றும் மொழிபெயர்ப்பு என பல்வேறு துறைகளில் பணியாற்றுகிறார். ஒழுங்குமுறை வகைப்பிரிவுகளால் மட்டுப்படாத அவரது நடைமுறை, அவரது படைப்புகளின் மாறிவரும் பொருள்விளக்கங்களைப் போலவே, திறந்த-முடிவுடையது.

கிம் லிம் (Kim Lim)
(பிறப்பு 1936, சிங்கப்பூர்; இறப்பு. 1997, ஐக்கிய இராச்சியம்)
இடைவெளிகள் I + II
1973
பைன் (Pine)
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2015-00420

'இடைவெளிகள் I + II' ஏணி போன்ற மர அமைப்புகள் பலவற்றைக் கொண்டுள்ளது, அவை ஒவ்வொன்றும் ஒரு முதுகெலும்பு மற்றும் ஒரு தொகுப்பு முனைகளைக் கொண்டுள்ளன. இந்த ஏற்பாடு கிம் லிம் (Kim Lim) முன்னரே தீர்மானித்த பல வாய்ப்பு வரிசைமாற்றங்களில் (permutations) ஒன்றைக் குறிக்கிறது. இப்படைப்பு, சிற்பக்கலையில் லிம்மின் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுறையையும், காட்சித் தாளத்தை உருவாக்குதல் முதல் நிழல்களை மாற்றுதல் வரை ஒளியைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது. லிம்மைப் பொறுத்தவரை, அவரது படைப்பில் உள்ள இடைவெளிகள் அல்லது எதிர்மறை இடங்கள் சாத்தியக்கூறுகளுடன் உயிரோட்டமாக உள்ளன, அவை இயற்கை, இசை மற்றும் அன்றாட வாழ்க்கையில் காணப்படாத சீரளவுமுறைகளைக் குறிக்கின்றன.

**SG2**

| |
|---|
| "நீங்கள் ஓர் ஓவியராக இருந்தால், நீங்கள் ஒரு கைவினைஞரும் வடிவமைப்பாளரும் கூட. நான் எனது வேலையிலும் எனது கண்காட்சிகளிலும் முழுமையாக ஈடுபட்டுள்ளேன். பௌஹாஸில் (Bauhaus) எனது உறுதியான அடித்தளம் அதனை எனக்குக் கற்றுக் கொடுத்தது."<br>எங் டோ (Eng Tow), தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், 1982.<br><br>எங் டோவ் ஒரு பலதுறைசார் ஓவியர், புடைப்பு மற்றும் வண்ணம் மூலம் விளைவுகளை உருவாக்க துணியைப் புதுமையான மற்றும் முறையான வகையில் பயன்படுத்தியதற்காகப் புகழ்பெற்றவர். அவர் ஐக்கிய இராச்சியத்தில் தனது கல்வியைத் தொடர்வதற்கு முன்பு, நன்யாங் நுண்கலைக் கழகத்தில் ஜார்ஜெட் சென்னின் (Georgette Chen) கீழ் பயின்றார், அங்கு அவர் பௌஹாஸ் (Bauhaus) முறைக் கற்பித்தலை எதிர்கொண்டார், இது பொருள் ஆய்வு மற்றும் வலுவான வடிவமைப்புக் கொள்கைகளை வலியுறுத்தியது. 1981 ஆம் ஆண்டு சிங்கப்பூர் திரும்பிய அவர், ஆல்பா குழுமத்தில் இணைந்து, ஆல்பா கலைக்கூடத்துடன் சேர்ந்து காட்சிப்படுத்தினார். டோவின் செயல்முறை துணி, காகிதம் மற்றும் முப்பரிமாண வடிவங்களை உள்ளடக்கியது, இஃது அவரது உள்ளுணர்வு மற்றும் ஆய்வு அணுகுமுறையைப் பிரதிபலிக்கிறது, இயற்கை மற்றும் மீவியற்பியல் ஆற்றல்களால் (metaphysical forces) ஆழமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மரபுவடிவக் கலை எல்லைகளுக்கு அப்பால், அவர் மேடை, துணி மற்றும் புத்தகம் ஆகியவற்றின் வடிவமைப்பிலும் பணியாற்றியுள்ளார். |
| எங் டோவ் (Eng Tow)<br>(பிறப்பு 1947, சிங்கப்பூர்)<br>சாம்பல் நிழல்கள்<br>சுமார் 1970கள்<br>பருத்தி 'டிக்கிங்' உறை மீது 'குயில்ட்' தையல்<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2024-00676<br><br>‘சாம்பல் நிழல்கள்’ என்பது அமைப்பு, சீரளவுமுறை மற்றும் ஒளி பற்றிய நுட்பமான மற்றும் சிக்கலான ஆய்வாகும். ஒரு சதுர வடிவ, பொதுவாகப் படுக்கைக்கு பயன்படுத்தப்படும் இறுக்கமாக நெய்யப்பட்ட பருத்தித் துணியான 'டிக்' துணி, கவனமாக தைக்கப்பட்டு ஒன்பது வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு திசைபார்த்து மடிக்கப்படுகிறது. ஒன்றாக, அவை இயக்கத்தின் ஒளியியல் மாயையை உருவாக்கும் சீரளவுமுறை விளைவுகளின் மயக்கும் கட்டத்தை உருவாக்குகின்றன. |

**SG2**

| |
|---|
| இஃது ஓவியமா அல்லது துணி வடிவமைப்பா? மொத்தக் கலைப்படைப்பு பற்றிய பௌஹாஸ் (Bauhaus) கருத்தாக்கத்தால் தகவல் பெற்ற, எங் டோ (Eng Tow), கலைக்கும் கைவினைக்கும் இடையிலான எல்லைகளை மங்கலாக்குகிறார் மற்றும் விரிவான சாத்தியக்கூறுகளைக் கொண்ட ஒரு வளமான கலை ஊடகமாகத் துணிகளை மறுகற்பனை செய்கிறார். |
| எங் டோவ் (Eng Tow)<br>(பிறப்பு 1947, சிங்கப்பூர்)<br>பெயரிடப்படாதது – பனை மரங்கள்<br>சுமார் 1983–1984<br>மரச்சட்டத்தின் மீது நீட்டிக்கப்பட்ட பாலியஸ்டர் அடைப்புத்துணியுடன் (wadding) கூடிய துணிப் புடைப்புச் சிற்பம் (50% பாலியஸ்டர்/50% பருத்தி)<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு 2016-00742<br><br>டைம்ஸ் ஆஃப் சிங்கப்பூர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் படைக்கப்பணிக்கப்பட்ட இத்துணிப் புடைப்புச் சிற்பம், புகைப்படம் எடுக்கப்பட்டு "சிங்கப்பூர்க்கு புகழ்வணக்கம்" (1984) என்ற புத்தகத்தில் மீண்டும் உருவாக்கப்பட்டது. துணியில் தைக்கப்பட்ட இப்படைப்பில், மைய முதுகெலும்பிலிருந்து வெளிப்படும் மடிப்புகளின் வெடிப்பு, புத்தகத்தின் அட்டைப்படத்தில் இடம்பெற்றுள்ள பயணியின் உள்ளங்கையை எதிரொலித்து அதன் மடிப்புக் கோடுகளுடன் ஒத்துப்போகிறது. எங் டோவ் (Eng Tow) தனது வாழ்க்கையில் ஏராளமான பொது மற்றும் தனியார் பதவிகளைப் பெற்றார், ஓர் ஓவியர், கைவினைஞர் மற்றும் வடிவமைப்பாளராகச் சீராகப் பணியாற்றினார், இப் பணிப்பொறுப்புகளை ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட வேலை முறைகளாக அவர் கருதினார். |
| டான் பிங் சியாங் (Tan Ping Chiang)<br>(பிறப்பு 1940, மலேசியா)<br>இசை<br>1979<br>பெயிண்ட், மரம், மூங்கில், கண்ணாடி மற்றும் உலோகம்<br>ஓவியரின்பரிசு<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு ASB-0010<br><br>இம்மரப் புடைப்புச் சிற்பம் மூங்கில் தண்டுகள், வட்டக் கண்ணாடிகள் மற்றும் மரக் கூறுகளை ஒன்றிணைத்து இசையை பிரதிநிதித்துவப்படுத்துகிறது, இது கலைஞரின் நீடித்த ஆர்வத்தை |

| |
|---|
| எடுத்துக்காட்டுகிறது. டான் பிங் சியாங் (Tan Ping Chiang) சிங்கப்பூரின் ஓவியம் மற்றும் வடிவமைப்புச் சூழலை கல்வி மூலம் வடிவமைத்தார். அவர் நன்யாங் நுண்கலைக் கழகத்தில் பயன்பாட்டுக் கலைகள் துறையின் முதல் தலைவராகவும், சிங்கப்பூர் சமகால அச்சுக்கலைச் சங்கத்தின் நிறுவனத் தலைவராகவும் இருந்தார். அவரது படைப்புகள் பெரும்பாலும் ஓவியம், வடிவமைப்பு மற்றும் இசையை ஆராய்கின்றன, ஓவிய உருவாக்கத்திற்கான அவரது பன்முக அணுகுமுறையைப் பிரதிபலிக்கின்றன. |
| "எல்லாவற்றையும் கோடுகள் மற்றும் கோணங்களின் அடிப்படை வடிவங்களுக்கு எளிமைப்படுத்தலாம்."<br>அந்தோணி பூன் (Anthony Poon), தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், 1972.<br><br>நன்யாங் நுண்கலைக் கழகம் மற்றும் லண்டனில் உள்ள பைம் ஷா ஓவியப் பள்ளி ஆகியவற்றில் பட்டம் பெற்ற அந்தோணி பூன், இயக்க ஒளியியல் மற்றும் இடஞ்சார் விளைவுகளை உருவாக்கும் வடிவியல் மற்றும் புடைப்புச் சிற்பங்களுக்காகக் கொண்டாடப்படுகிறார். பௌஹவுஸ் பள்ளி, கடின-முனை ஓவியம் மற்றும் இயக்க மாயை ஓவியம் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட பூன், ஓவியம், வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பத்தின் குறுக்குவெட்டுகளை முறையாக ஆராய்ந்தார். 1970களின் முற்பகுதியில் தொடங்கிய அவரது அலைத் தொடருக்காக அவர் மிகவும் புகழ்பெற்றார். அதிர்வெண் அலைகளின் நீர்ம இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு, ஓவியங்கள் ஆற்றலுடன் அலைபாய்ந்து, மரபு ஓவியத்தின் நிலையான தன்மையை மீறுகின்றன. 1973 முதல் 1978 வரை, பூன் ஆல்பா கலைக்கூடத்தை நிர்வகித்தார் மற்றும் ஆல்பா குழுமத்தின் உறுப்பினராக இருந்தார், இக்குழுமம் கலைக்கூடத்துக்கு மேலே படைப்பகங்களைப் பகிர்ந்து கொண்ட ஒன்பது கலைஞர்களின் கூட்டு ஆகும். |
| அந்தோணி பூன் (Anthony Poon)<br>(பிறப்பு 1945, சிங்கப்பூர்; இறப்பு 2006, சிங்கப்பூர்)<br>வெள்ளை 2P இல் W<br>சுமார் 1990கள்<br>கித்தான்-புடைப்பில் அக்ரிலிக்<br>மறைந்த அந்தோணி பூன் குடும்பத்தின் பரிசு<br>சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு 2007-01065<br><br>வெள்ளை 2P இல் W, அந்தோணி பூனின் வடிவமைக்கப்பட்ட கித்தான்களின் சிற்ப விளைவுகளையும் அவரது முந்தைய |

| |
|---|
| ஓவியங்களின் ‘சைன்’ (sine) அலைகளின் சீர்வடிவப்படிகளையும் ஒருங்கிணைக்கிறது. அழகிய மேற்பரப்பின் கீழ், அலுமினியத் தாங்கிகள் (struts) ஒரு பெரிய அலை வடிவத்தை உருவாக்குகின்றன, கித்தானுடன் தொடர்பு கொள்ள ஒளியை அழைக்கின்றன மற்றும் மென்மையான இயக்கம் போன்ற உணர்வை மேம்படுத்துகின்றன. முழுவதும் கையால் வரையப்பட்டிருந்தாலும், மேற்பரப்பு ஏறக்குறைய பீய்ச்சு-வண்ணப்பூச்சு செய்யப்பட்டதாகத் தெரிகிறது, இது பூனின் துல்லியத்தையும் கட்டுப்பாட்டையும் மெய்ப்பிக்கிறது. |
| டோ தியோ ஹுவாங் (Tow Theow Huang)<br>(பிறப்பு 1945, சிங்கப்பூர்)<br>1. உள்ளே உள்ள பெட்டிகள்<br>1977<br>அக்ரிலிக் மற்றும் ஒளி<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு ASB-0006<br><br>2. பெயரிடப்படாதது (பெட்டித் தொடர்)<br>1977<br>அக்ரிலிக் மற்றும் ஒளி<br>வீ இச்வீ ஹெங்கின் (Wee Chwee Heng) திரட்டு<br><br>3. முதல் மழை<br>1977<br>அக்ரிலிக் மற்றும் ஒளி<br>ஓவியரின் திரட்டு<br><br>டோ தியோ ஹுவாங்கின் (Tow Theow Huang) ஒளிச் சிற்பங்கள், அக்ரிலிக் தாள்களை ஒரு பெட்டியில் துளையிட்டுச் செருகி உருவாக்கப்படுகின்றன, அதன்மூலம் அவற்றின் ஒளிரும் விளிம்புகள் மற்றும் பொறிக்கப்பட்ட வடிவங்கள் ஒளிர்கின்றன, இவ்வாறு ஒளியியல் விளைவுகள் உருவாக்கப்படுகின்றன. 1977 ஆம் ஆண்டு ஓவியர்களால்-நடத்தப்பட்ட ஆல்பா கலைக்கூடத்தில் முதன்முதலில் காட்சிப்படுத்தப்பட்ட இவ்வோவியத்தில், அந்நேரத்தில் பார்வையாளர்கள் தாள்களை மறுசீரமைக்க அழைக்கப்பட்டனர், இதன்மூலம் அவர்களின் சொந்த வரிசை வடிவங்களை அவர்களால் உருவாக்க முடிந்தது, இது படைப்புடன் பார்வையாளர்களைத் தொடர்பு கொள்ள ஊக்கமளித்தது. இவ்விளையாட்டுணர்வும் பங்கேற்புணர்வும் டோவின் அணுகுமுறையின் மையமாக இருந்தது. அலங்காரக் கூறுகள், ஒளி மூலங்கள், "பொம்மைகள் ஆகியவற்றைப் போன்ற பன்முகப் பொருள்களாக அவர் தனது சிற்பங்களைக் கற்பனை செய்தார் |

சோய் வெங் யாங் (Choy Weng Yang)
(பிறப்பு 1930, சிங்கப்பூர்)
கிடைமட்டங்கள் I
1977
கித்தானில் எண்ணெய்
ஓவியரின் பரிசு
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு
P-0235

இவ்வோவியத்தின் மேற்பரப்பைத் துடிப்பான வண்ணங்களின் கிடைமட்டப் பட்டைகள் நிரப்புகின்றன. செங்குத்து மற்றும் கிடைமட்ட அமைப்புகளை உருவாக்க சிலவை ஒழுங்கமைகின்றன, வண்ண ஓட்டத்தைக் குறுக்கிடுகின்றன. இங்கே, சோய் வெங் யாங் (Choy Weng Yang), இணக்கம், மாறுபாடு, அமைப்பு மற்றும் தொனி போன்ற வண்ண உறவுகளையும், மேலும் அவை எவ்வாறு உணர்வை வடிவமைக்கின்றன எனவும் ஆராய்கிறார். அவரது வெளிப்படையான தூரிகை வேலைப்பாடும் இழைவு அமைப்புள்ள வண்ணப்பூச்சும் கடுமையான கோட்பாட்டைப் பின்பற்றுவதற்குப் பதிலாக உணர்ச்சிகளைத் தூண்டுகின்றன. 1973 ஆம் ஆண்டில் பௌஹவுஸ் ஓவியர்களான ஜியோர்கி கெப்ஸ் (György Kepes) மற்றும் ஜோசப் ஆல்பர்ஸ் (Josef Albers) ஆகியோரைச் சந்தித்த சோய், ஓர் ஓவியர், ஓவியக்காப்பாளர், கண்காட்சி மற்றும் வரைகலை வடிவமைப்பாளர் என பலதுறைப் பயிற்சியைக் கொண்டிருந்தார், மேலும் ஓவியம், கைவினை மற்றும் வடிவமைப்பை ஓர் ஒருங்கிணைந்த காட்சி மொழியில் இணைப்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார்.

டான் லிப் செங் (Tan Lip Seng)
(பிறப்பு 1942, சிங்கப்பூர்; இறப்பு. 2025, சிங்கப்பூர்)
இடது
மூன்று தொழிலாளர்கள்
1965, 2017 இல் அச்சிடப்பட்டது
காப்பகத் தாளில் மின்னிலக்கமுறை அச்சிடல்

வலது
இரண்டு தொழிலாளர்கள்
1968, 2017 இல் அச்சிடப்பட்டது
காப்பகத் தாளில் மின்னிலக்கமுறை அச்சிடல்
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2018-00046 | 2018-00048
கலை தத்தெடுப்பு மற்றும் கையகப்படுத்தல் திட்டத்திற்கான நன்கொடைகளால் இக்கையகப்படுத்தல் சாத்தியமானது.

**SG2**

| |
|---|
| டான் லிப் செங்கின் (Tan Lip Seng) இரண்டு தொழிலாளர்களும், மூன்று தொழிலாளர்களும்', 1960களில் சிங்கப்பூரின் வேகமாக மாறிவந்த நிலப்பரப்பிலிருந்த தொழிலாளர்களைக் காட்டுகின்றன. வண்ண வழித்தோன்று தொகுப்பு எனப்படும் ஒரு புதுமையான நுட்பத்தை டான் உருவாக்கினார். பல ஒளிபுகு (transparent) வண்ணங்களை அடுக்கி, கைம்முறையாகக் கையாளுவதன் மூலம், அவர் நிறச்செறிவு கொண்ட மற்றும் தீவிரமான வரைகலைத் தரத்துடன் பார்வையை ஈர்க்கும் படக்கோப்புகளை உருவாக்கினார். முதலில் 35 மிமீ நழுவுசட்டகங்களாகத் (slides) தயாரிக்கப்பட்டு, திரைகாட்டவிருந்த இப்படைப்புகள், உயர்-தொனிமாறுபாட்டு வண்ணப் புகைப்படக் கலையில் அவரது திறமையைக் காட்டுகின்றன. மருத்துவப் புகைப்படக் கலைஞராக டானின் பின்னணி அவரது தொழில்நுட்பத் துல்லியத்தைத் தெரிவித்தது, சிங்கப்பூரின் மாறிவரும் பௌதிக நிலப்பரப்பையும் அதற்குள் இருக்கும் மனித அனுபவத்தையும் ஆவணப்படுத்த துணிச்சலான கலை ஆய்வுகளுடன் அதை அவர் இணைத்தார். |
| "எனது புகைப்படப் பாணி எளிமையானது. இஃது இயல்பானது மற்றும் புவிக்குக் கீழ் நிலையிலானது (down-to-earth). இது வாழ்க்கையைப் பற்றிய தனித்துவமான பண்புகளைக் கண்டறிந்து அவற்றை ஒரு நினைவுப் பரிசாக, பாராட்டுக்குரிய ஒரு மதிப்புமிக்க பொருளாக மாற்றுவது பற்றியது."<br>லிம் குவாங் லிங் (Lim Kwong Ling), ஒளியில் கதைகள் (*Stories in Light)*, 2023.<br><br>லிம் குவாங் லிங் தனது முப்பதுகளில் புகைப்படக் கலையைக் கற்றுக்கொள்ளத் தொடங்கினார், அன்றாட வாழ்க்கையிலிருந்தும், தனது குடும்பத்தினருடனான தருணங்களை ஆவணப்படுத்தும் விருப்பத்திலிருந்தும் தாக்கத்தைப் பெற்றார். சிங்கப்பூரின் வயது வந்தோர் கல்வி வாரியத்தில், உள்ளூர்ப் புகைப்படக் கலைஞர் லீ சோவ் லிம் (Lee Sow Lim) கற்பித்த தொடக்கநிலைப் புகைப்படப் படிப்பை அவர் படித்தார். 1965 ஆம் ஆண்டில், லிம் சிங்கப்பூர் புகைப்படக் கலைச் சங்கத்தை இணைந்து நிறுவினார். உள்ளூர் மற்றும் சர்வதேச எழிற்கூடக் (salon) கண்காட்சிகளில் பரவலாகப் பங்கேற்றார். இருப்பினும், 1970களில், வழக்கமான எழிற்கூடப் புகைப்படக் கலையிலிருந்து அவர் தன்னை விலக்கிக் கொண்டார், பட அழகியலுக்கிருந்த முக்கியத்துவத்தை அவர் ஏற்கவில்லை. அதற்குப் பதிலாக, லிம் ஆவணப்பட புகைப்படக் கலைக்குத் திரும்பினார், மேடைக் காட்சிகள் அல்லது எழிற்காட்டுகைகளை (pose) நாடாமல் சிங்கப்பூரில் வாழ்க்கையை காலவரிசைப்படுத்துவதற்குத் தன்னை முழுதும் ஒப்படைத்துக் கொண்டார். |

**SG2**

லிம் குவாங் லிங் (Lim Kwong Ling)
(பிறப்பு 1932, சிங்கப்பூர்)
கடந்த காலத்தில் மரீன் பரேட்
1970
காகிதத்தில் ஜெலட்டின் வெள்ளி அச்சு
ஓவியர் மற்றும் குடும்பத்தினரின் பரிசு
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2019-00010

இப்புகைப்படம் லிம் குவாங் லிங்கின் படைப்புகளில் தொடர்ச்சியாக இருந்துவரும் கருப்பொருளான, சிங்கப்பூரின் மாறிவரும் நகர்ப்புற நிலப்பரப்பின் பின்னணியில் அடிக்கடி கவனிக்கப்படாத தொழிலாளர்கள் பற்றி பிரதிபலிக்கிறது. பின்னணியில், வீடமைப்பு வளர்ச்சி கழகத்தின் உயரமான வெள்ளை நிற அடுக்குமாடிக் குடியிருப்புகள் நவீனத்துவத்தையும் முன்னேற்றத்தையும் குறிக்கின்றன, அதே நேரத்தில் முன்புறத்தில், தொழிலாளர்கள் சூரியனுக்குக் கீழே இருண்ட தரையில் உழைக்கிறார்கள். மேடையேற்றமோ அல்லது கையாளுதலோ இல்லாமல், கவனமாகப் படக்கோப்பு செய்தல் மற்றும் வலுவான காட்சிக் கதைசொல்லல் மூலம் லிம் காட்சியை உருவாக்குகிறார். இந்த அறிவார்ந்த தொடர்புபடுத்தல், நாட்டின் வளர்ச்சியை இயக்கும் உடலுழைப்புத் தொழிலாளர்கள் மீது கவனத்தை ஈர்க்கிறது.

யூஸ்மான் அமன் (Yusman Aman)
(பிறப்பு 1937, சிங்கப்பூர்; இறப்பு 2016, மலேசியா)
கட்டமைப்பு I
1973
பாடிக்
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு P-0184

மென்மையான இளஞ்சிவப்பு நிறங்களில் நேர்கோட்டு வடிவங்கள் இந்த பாடிக் ஓவியத்தின் குறுக்கே மோதி, மேலிட்டு, அடுக்கி, ஒரு மாறும் சீரளவுமுறையை (rhythm) உருவாக்குகின்றன. தொடக்கத்தில் ஓர் உருவ ஓவியராக இருந்த யுஸ்மான், பாடிக் ஓவியத்தை அக்ரிலிக் வண்ணப்பூச்சுடன் இணைத்து ஆய்வுப்பயிற்சி செய்ததற்காக அறியப்பட்டார். வணிக சூழல்களில் தாமாகக் கற்றுக் கொண்ட ஓவியரான யூஸ்மானின் பயிற்சி, கைவினை மரபுகளையும் நவீன சுருக்கவியலையும் இணைக்கிறது. 1960கள் மற்றும் 1970களில் சிங்கப்பூரில் இருந்த பல ஓவியர்களைப் போலவே, மாறிவரும் பண்பாட்டு மற்றும் சமூக நிலப்பரப்பை வெளிப்படுத்தக்கூடிய புதிய காட்சி மொழிகளை அவர் பின்பற்றினார்.

**SG2**

"அஃது உங்கள் உள்ளத்திலிருந்து, உங்கள் ஆற்றலிலிருந்து, உங்கள் நற்பண்பிலிருந்து வர வேண்டும். அவ்விஷயங்களுக்கு எந்த இரகசியமும் இல்லை. அவை உள்ளிருந்து வருவதால் அவை உண்மையானவை. என் உடல் அசைகிறது, என் உணர்ச்சிகள் அக்கணத்தில் பொதிந்துள்ளன."
டான் டெங்-கீ (Tan Teng-Kee), ஓர் உண்மைக்கு எத்தோற்றமும் இல்லை: பொருளுக்கு அப்பாலுள்ள ஓவியம், 2015.

டான் டெங்-கீ (Tan Teng-Kee) ஒரு சிற்பியாகவும், ஓவியராகவும் இருந்தார், அத்துடன் 1970கள் மற்றும் 1980களில் செல்வாக்கு மிக்க ஆசிரியராகவும் இருந்தார். ஜெர்மனியில் உள்ள அரசு நுண்கலைக் கழகத்தில் சிற்பம் மற்றும் அச்சுத் தயாரிப்பில் பயிற்சி பெறுவதற்கு முன்பு அவர் ஹாங்காங்கில் சீன மை மற்றும் மேற்கத்திய ஓவியம் பயின்றார். டான் 1970 இல் சிங்கப்பூருக்குக் குடிபெயர்ந்தார், அங்கு அவர் பஹாருதீன் தொழிற்கல்வி நிறுவனத்தில் பயன்பாட்டுச் சிற்பம் வடித்தலைக் கற்பித்தார். சிங்கப்பூரில் சிற்பக்கலைக்கான புதிய அணுகுமுறைகளை அறிமுகப்படுத்துவதில் டான் முக்கியப் பங்கு வகித்தார், தொழில்துறை உலோகங்களைப் பயன்படுத்தி மாறும் சுருக்கவியல் வடிவங்களை உருவாக்கினார். அவரது படைப்புகள் அழகெழுத்து மற்றும் மை ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த அடித்தளத்தாலும், அவரது ஆசிரியரான சிற்பி நோர்பர்ட் கிரிக்கின் (Norbert Kricke) செல்வாக்காலும் வேரூன்றியுள்ளன.

டான் டெங்-கீ (Tan Teng-Kee)
(பிறப்பு 1937, மலேசியா; இறப்பு. 2016, ஆஸ்திரேலியா)
சவாரியாளருக்கான மாதிரி
1983
எஃகு, வண்ணப்பூச்சு மற்றும் மரம்
ஓவியரின் பரிசு
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2016-00482

இது 1983 ஆம் ஆண்டு பாங்காக்கில் நடைபெற்ற 2வது ஆசியான் சிற்பக் கருத்தரங்கில் (ASEAN Sculpture Symposium) டான் டெங்-கீ பங்கேற்று படைத்த படைப்பு, அங்கு அவர் சிங்கப்பூரைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். முடிக்கப்பட்ட சிற்பம் இன்னும் பாங்காக்கின் ‘சதுச்சக்’ (Chatuchak) பூங்காவில் உள்ளது. செதுக்குதல் அல்லது உருவடித்தல் போன்ற சிற்ப மரபுகளிலிருந்து விலகி, கலை வரலாற்றில் தொடர்ச்சியான ஒரு கருப்பொருளான ஒரு சுருக்கமான குதிரையோட்டியைச் சித்தரிக்க, டான் தொழில்துறைக் கூறுகளை அடுக்கி உலோகப்பற்றவைப்பு செய்தார். தொழில்துறை

| |
|---|
| உருப்பூட்டல் (fabrication) மற்றும் தனித்துவமான அழகியலில் அவரது நிபுணத்துவம் காரணமாக, பெரிய அளவிலான பொதுச் சிற்பங்களுக்கு டான் ஏராளமான பணிப்புகளைப் பெற்றார். |
| டான் டெங்-கீ (Tan Teng-Kee)<br>(பிறப்பு 1937, மலேசியா; இறப்பு. 2016, ஆஸ்திரேலியா)<br>1979 ஆம் ஆண்டில் படைக்கப்பட்ட தீச் சிற்பத்தைக் கொண்ட 'சுற்றுலா' (Picnic) கண்காட்சியின் புகைப்பட ஆவணங்கள்<br>டான் டெங்-கீயின் அன்பான அனுமதியுடன், சிங்கப்பூர் தேசியக் காப்பக நூலகம் & காப்பகத்தால் மின்னிலக்க வடிவுருவு செய்யப்பட்டது.<br><br>1979 ஆம் ஆண்டில், டான் டெங்-கீ நார்மண்டன் பேட்டையில் (Normanton Estate) உள்ள தனது வீட்டிற்கு வெளியே ஒரு திடலில் தனது ஓவியங்கள் மற்றும் சிற்பங்களின் வெளிப்புறக் கண்காட்சியான 'சுற்றுலா'வை நடத்தினார். அதில், மரக்கம்பங்களால் தாங்கப்பட்ட, செய்தித்தாள்களைக் கொண்ட ஒரு தீவத்தியுடன் (torch) கூடிய உயரமான உலோக அமைப்பான தீச்சிற்பம் இருந்தது. மாலை வேளையில், டான் ஒரு ஜெர்மன் பண்பாட்டு இணைப்பாளரை அழைத்து படைப்பைத் தீவைக்கச் செய்து, அதனை உருவாக்குதல் மற்றும் அழிவைக் கொண்ட வியத்தகு செயலாக மாற்றினார். இந்தத் தொடர் நடவடிக்கைகள் அவரது கண்காட்சியின் தொடக்கத்தைக் குறித்தன. இதற்குப் பிறகு டான் நிகழ்த்துகலைக்குத் திரும்பவில்லை என்றாலும், இந்நிகழ்வு சிங்கப்பூரின் தொடக்கக்கால நிகழ்வுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது, இது 1980களின் பிற்பகுதியில் கருத்தியல் நடைமுறைகளின் எழுச்சியை முன்னறிவித்தது. |
| குவேய் சின் பென் (Kwei Chin Pen)<br>(பிறப்பு 1927, சீனா; இறப்பு 2020, சிங்கப்பூர்)<br>நீலப் பறவைகளும் மேப்பிள் மரங்களும்<br>1985<br>சீன மை மற்றும் காகிதத்தில் வண்ணம்<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2021-00007<br><br>இப்படைப்பு, பூ-மற்றும்-பறவை வகையின் (genre) மீதான குவேய் சின் பென்னின் (Kwei Chin Pen) தேர்ச்சியையும், விரல் மை ஓவியத்தின் சிறப்பு நுட்பத்தில் அவரது நிபுணத்துவத்தையும் காட்டுகிறது. பாரம்பரிய சீன ஓவியத்தின் படக்கோப்புக் கொள்கைகளைப் பின்பற்றி, இப்படைப்பு ஆரஞ்சு மேப்பிள் இலைகளின் மூலைவிட்டக் கிளைகளைக் கொண்டுள்ளது. பல்வேறு ஒளிபுகாத் தன்மைகளுடன் |

வரையப்பட்ட இலைகள், நீலப் பறவைகளுடன் ஆழத்தையும் வேறுபாட்டையும் உருவாக்குகின்றன.

சென் சோங் இஸ்வீ (Chen Chong Swee), சே செங் லின் (Che Cheng Lin) மற்றும் பின்னர் விரல் ஓவியக் கலைஞர் வு இட்சாய் யென் (Wu Tsai Yen) ஆகியோரிடம் குவே பயிற்சி பெற்றார். ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் துறையில் ஒரு முன்னோடியாக அவர், சான் யி (San Yi) விரல் ஓவியச் சங்கத்தை இணைந்து நிறுவினார் மற்றும் 1986 இல் சீன ஓவியர்கள் சங்கத்தின் முதல் பெண் தலைவரானார். கலைக்கு அப்பால், இக்வே (Kwei) ஒரு வானொலி ஒலிபரப்பாளர், நடிகர் மற்றும் கல்வியாளராக மாறுபட்ட வாழ்க்கையைக் கொண்டிருந்தார், குறிப்பாக, லீ குவான் யூவின் (Lee Kuan Yew) மாண்டரின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

---

ஹாங் செக் செர்ன் (Hong Sek Chern)
(பிறப்பு 1967, சிங்கப்பூர்)
கியாகோமெட்டிக்குப் பிறகு "நகரச் சதுக்கம்"
சுமார் 1998
கலப்பு ஊடகங்கள்
தேசிய கலை மன்றத்தின் பரிசு
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2024-01101

மலைகள், கடல்கள் எனும் பாரம்பரிய மை ஓவியக் கருப்பொருள்களுக்கு அப்பால், நகர்ப்புற இடத்தின் பழக்கமான, ஆனால் அமைதியற்ற உணர்வை வெளிப்படுத்த, ஹாங் சேக் செர்ன் அடர்த்தியான கோடுகள் மற்றும் கூறுகளைப் பயன்படுத்துகிறார். இப்படைப்பு, சுவிஸ் சிற்பி ஆல்பர்டோ கியாகோமெட்டியின் (Alberto Giacometti) நகரச் சதுக்கத்திற்கு (1948) எதிர்வினையாகும், அஃது ஒரு பாழடைந்த நிலப்பரப்பில் ஐந்து மெல்லிய மனித உருவங்களைக் கொண்டுள்ளது. இதற்கு நேர்மாறாக, ஹாங்கின் சூழல் மனிதர்கள் இல்லாதது, அதன் எப்போதும் விரிவடையும் கோடுகள் பார்வையாளரை மூழ்கடித்து, சூழ்ந்து, நகர்ப்புறச் சூழல்களின் கட்டுப்பாடு மற்றும் தனிமைப்படுத்தல் உணர்வு பற்றிய சிந்தனைமிக்க பிரதிபலிப்பை வழங்குகின்றன.

---

லூ ஃபோ சாங் (Loo Foh Sang)
(பிறப்பு 1944, மலேசியா)
பறக்கும் கோட்டை
1968
திரையச்சு
திரு. டே லாங்கின் பரிசு

| |
|---|
| சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு P-0354-T<br><br>‘பறக்கும் கோட்டை’யில், லூ ஃபோ சாங் (Loo Foh Sang), சிக்கலான, பின்னிப்பிணைந்த வடிவங்களை வடிவமைக்க சாய்சதுர வடிவத்தைப் பயன்படுத்துகிறார், இது பறத்தல் மற்றும் முடுக்கத்தின் இயக்கத்தைக் குறிக்கிறது. நன்யாங் நுண்கலைக் கழகத்தின் பட்டதாரியான லூ, தேசிய நுண்கலை பள்ளி மற்றும் புகழ்பெற்ற பணிமனை 17 இல் (Atelier 17) ஸ்டான்லி ஹேய்ட்டரின் (Stanley Hayter) கீழ் அச்சுத் தயாரிப்பைப் படிக்க பாரிஸுக்குச் சென்றார். 1960கள் மற்றும் 1970களில் இருந்த பல ஓவியர்களைப் போலவே, லூவும் அச்சுத் தயாரிப்பில் தனது பயிற்சியை மேலும் மேம்படுத்துவதற்காக வெளிநாடுகளுக்குச் சென்றுவந்த பின்னர் சிங்கப்பூரிலும் அதற்கு அப்பாலும் கண்காட்சிகள் மூலம் தனது சாதனைகளைக் காட்சிப்படுத்தினார். |
| சென் செங் மெய் (Chen Cheng Mei)<br>(பிறப்பு 1927, சிங்கப்பூர்; இறப்பு. 2020, சிங்கப்பூர்)<br>டுரியன்<br>1986<br>செதுக்குதல்<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு GI-0130<br><br>'சென் செங் மெய்'யின் அச்சில், பழம்தரும் டுரியன் மரம், நீல நிறத்திலுள்ள அதன் தண்டு மற்றும் கிளைகளுடன், இழைவு அமைப்புள்ள, மண் போன்ற வெளிர் பழுப்பு நிறப் பின்னணியில் உள்ளது. இயற்கையின் மீதான அவரது வாழ்நாள் முழுவதும் உள்ள ஈர்ப்பு, வெப்பமண்டல தாவரங்களால் சூழப்பட்ட அவரது தொடக்கக் காலங்களால் ஓரளவுக்கு வடிவமைக்கப்பட்டது, ஏனெனில் அவரது தந்தை மந்தாரை (orchid) மற்றும் டுரியன்களைப் பயிரிட்டார். 1985 ஆம் ஆண்டு லாசால் கலைக் கல்லூரிக்கு புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு அச்சு இயந்திரங்களை நன்கொடையாக வழங்கியதன் மூலம் சென் சிங்கப்பூரின் அச்சுத் தயாரிப்புத் துறைக்கு பெரும் பங்களிப்பைச் செய்தார். இது பள்ளியின் அச்சுத் துறையை நிறுவ உதவியது, அங்கு இச்யிங் சியோக் டின் (Chng Seok Tin) போன்ற கலைஞர்கள் எதிர்காலத் தலைமுறைக் கலைஞர்களுக்கு அச்சிடலைக் கற்பித்து வளர்த்தார்கள். |
| "பல்வேறு வகையான பொருள்களுடன் விளையாடுவதிலும், புதிய நுட்பங்களை ஆராய்வதிலும் எனக்கு ஆர்வம் உள்ளது. ஓவியத்தை உருவாக்கும் செயல்முறையே ஒரு பொருள்மயமாக்கப்பட்ட |

செயலாக மாறுகிறது, இஃது எனது பார்வை மற்றும் சிந்தனையை காட்சித் தகவலாக மாற்றுகிறது."
இச்யிங் சியோக் டின் (Chng Seok Tin), தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், 1989.

சிங்கப்பூரில் அச்சுக்கலையை வளர்ப்பதில் இச்யிங் சியோக் டின் (Chng Seok Tin) முக்கியப் பங்கு வகித்தார், மேலும் 1986 முதல் 1997 வரை அதைக் கற்பித்தார். அவரது கலை சமூக அக்கறைகள், சுற்றுச்சூழல் மற்றும் மனித நிலைமை ஆகியவற்றை ஆராய்கிறது. ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா மற்றும் பாரிஸில் கலை பயில்வதற்கு முன்பு செங் சீன மொழி ஆசிரியராகப் பணியாற்றினார். அவர் பணிமனை 17-இல் ஸ்டான்லி ஹேய்ட்டரிடம் பயிற்சி பெற்றார். 1988 ஆம் ஆண்டில் தனது பார்வையின் பெரும்பகுதியை இழந்த போதிலும், அவர் தொடர்ந்து கலைப்படைப்புகளை உருவாக்கி, மாற்றுத்திறனாளிகளுக்காக வாதிட்டார். அச்சுக்கலைக்கு மிகவும் புகழ்பெற்றவர் என்றாலும், சாங் ஓவியம், சிற்பம், கலப்பு ஊடகம் மற்றும் நிறுவல் துறைகளிலும் பணியாற்றினார். முழு ஈடுபாடுள்ள எழுத்தாளரான இவர், 2007 இல் சிங்கப்பூர் சீன இலக்கிய விருதை வென்றார்.

இச்யிங் சியோக் டின்
(பிறப்பு 1946, சிங்கப்பூர்; இறப்பு. 2019, சிங்கப்பூர்)
தன்னுருவப்படம்
1989
காகிதத்தில் பொறித்தல் மற்றும் உலர்புள்ளியிடல்
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு
2021-01075

இச்யிங் சியோக் டின்னின் (Chng Seok Tin) வாழ்க்கையின் இருண்ட தருணங்களில் ஒன்றில் தன்னுருவப்படம் உருவாக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டில், அவர் ஒரு விபத்தை சந்தித்தார், அஃது அவரை ஏறக்குறைய முற்றிலும் பார்வையற்றவராக மாற்றியது. துயரம் இருந்தபோதிலும், அவர் விரைவில் கலைப்படைப்புக்குத் திரும்பினார், அவருடைய உணர்ச்சிகளை அவருடைய படைப்புகளில் செலுத்தினார். இந்த அச்சுப்படத்தில், கோடுகளின் அடர்த்தியான சிக்கல், எளிமையாக வரையப்பட்ட ஓர் உருவத்தை மூடி மறைத்து, பதற்றம் மற்றும் ஆற்றலின் உணர்வை உருவாக்குகிறது. இந்த அமைப்பு போராட்டம் மற்றும் மீள்தன்மை இரண்டையும் பிரதிபலிக்கிறது - இவையே 'இசயிங்'கின் பயிற்சிமுறையில் மையக் கருப்பொருள்கள்.

சியோ சாய்-ஹியாங் (Cheo Chai-Hiang)
(பிறப்பு 1946, சிங்கப்பூர்)
மேல்
தலைப்பற்றது – 29 துண்டுகள் (9)
1976
காகிதத்தில் பொறித்தல் மற்றும் நீர்த்தொனி (aquatint) அச்சு

கீழே
தலைப்பு இல்லாதது – 29 துண்டுகள் (8)
1976
காகிதத்தில் பொறித்தல் மற்றும் நீர்த்தொனி (aquatint) அச்சு
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2000-00149 | 2000-00148

இந்த அச்சுப் படிகளில், சியோ சாய்-ஹியாங் (Cheo Chai-Hiang) அச்சிடும் தகடுகளின் பொருள் இருப்பு மற்றும் அவரது செதுக்கல் கருவிகளின் அடையாளங்களை முன்னிலைப்படுத்த பாரம்பரிய முறைகளைத் தவிர்த்து வருகிறார். அவர் நீளமான தகடுகளை வெட்டுகிறார், சுத்தியல் கொண்டு அடிக்கிறார், எரிக்கிறார், இதனால் வேண்டுமென்றே சைகைகள் மற்றும் தற்செயலான தடயங்கள் வெளிப்படுகின்றன. இலண்டனில் உள்ள ராயல் கலைக் கல்லூரியில் உருவாக்கப்பட்ட இப்படைப்புகள், விசாரணை அமைப்புகள் மற்றும் கலையை உணரும் வழிகளை விசாரிப்பதற்கான அவரது பரந்த கருத்தியல் அணுகுமுறையைப் பிரதிபலிக்கின்றன.

"சிற்பம் செய்தல் மற்றும் அச்சு தயாரித்தல் ஆகிய இரண்டு செயல்பாடுகளும் எனக்கு சமமான முக்கியத்துவம் வாய்ந்தவை."

கிம் லிம் (Kim Lim), டேட் (Tate) கலைக்கூடக் குறிப்புகள், 1977.

ஒரு சிற்பியும் அச்சுத் தயாரிப்பாளரான கிம் லிம் (Kim Lim), தனது பயிற்சி முழுவதும் ஒளி, இடம் மற்றும் சீரளவுமுறைக்கான பண்புகளில் ஆழ்ந்த ஆர்வம் கொண்டிருந்தார். லிம் தனது 17 வயதில் சிங்கப்பூரை விட்டு லண்டனின் செயிண்ட் மார்ட்டின் கலைப் பள்ளியிலும் ஸ்லேட் நுண்கலைப் பள்ளியிலும் படிக்கச் சென்றார். லிம்மின் சிற்பங்களும் அச்சுகளும் எளிமையான வடிவங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டன, அவை காட்சி அதிர்வு மற்றும் சீரளவுமுறையை உருவாக்க மீண்டும் மீண்டும் செய்யப்படுகின்றன. அவரது சிற்பங்களும் அச்சுகளும் பெரும்பாலும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன, முதலில் ஓர் ஊடகத்தில் ஆராயப்பட்ட கருத்துகள் பெரும்பாலும் மற்றொன்றுக்குக் கடத்தப்பட்டன, இரு

பரிமாண மற்றும் முப்பரிமாண வெளிப்பாட்டிற்கு இடையில் நீர்மமாக நகரும் ஓவியரின் திறனை மெய்ப்பிக்கின்றன.

"செயல்பாட்டுக்கும் கலைத்துவத்திற்கும் இடையே தெளிவான பிரிவு என்று எதுவும் இல்லை. [...] தொடக்கப் பகுதியில் பதற்றம் இருக்கலாம். நான் சிற்பத்தை நோக்கிச் செல்ல வேண்டுமா, கலைத்துவத்தை நோக்கிச் செல்ல வேண்டுமா அல்லது செயல்பாட்டை நோக்கிச் செல்ல வேண்டுமா? ஆனால் நீங்கள் வளரும்போது, கை, களிமண், உங்கள் உணர்ச்சி, உங்கள் மனம், நீங்கள் செய்ய விரும்பும் இறுதிப் படைப்பில் எப்படியாவது வந்து இணையும். பிரிவு என்பது அவ்வளவு தெளிவாக இல்லை."
இஸ்கந்தர் ஜலீல் (Iskandar Jalil), உருமாற்றப் படம்: சிங்கப்பூரில் சமகாலச் சுட்டகளிமண் பாண்டங்கள், 1987.

ஒரு தலைசிறந்த மண்பாண்டக் கலைஞராகக் கருதப்படும் இஸ்கந்தர் ஜலீலின் (Iskandar Jalil) பீங்கான் படைப்புகள் பெரும்பாலும் செயல்பாட்டுப் பொருள்களையும் சிற்பக் கலைப்படைப்புகளையும் கொண்டுள்ளன. அவரது படைப்புகள் பல்வேறு பண்பாட்டு மூலங்களாலும், அவரது பயணங்களாலும் வளப்படுத்தப்பட்டுள்ளன, மேலும் உள்ளூர்க் களிமண், தனித்துவமான மெருகூட்டல்கள் மற்றும் தென்கிழக்காசிய மையக்கருத்துகளின் புதுமையான பயன்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவர் பஹாருதீன் தொழிற்கல்வி நிறுவனம் மற்றும் நன்யாங் நுண்கலைக் கழகம் போன்ற நிறுவனங்களில் ஐம்பதாண்டுகளுக்கும் மேலாகக் கற்பித்தார், கலை ஒருமைப்பாடு மற்றும் ஒழுக்கத்தை வளர்த்தார்.

இஸ்கந்தர் ஜலீல் (Iskandar Jalil)
(பிறப்பு 1940, சிங்கப்பூர்)
பாரம்பரியங்களுக்கும் சமகால வடிவங்களுக்கும் இடையிலான தொடர்பாடல்: #2 ஜாவி அரபு எழுத்துகள்
2002
கல்லாலான பொருள்கள் மற்றும் மெருகூட்டல்
இஸ்தானா கலைத் திரட்டு
2004-00190

இப்படைப்பின் மேற்பரப்பு முழுவதும் ஜாவி அழகெழுத்து பாய்கிறது. இஸ்கந்தர் ஜலீல் தனது மட்பாண்டங்களில் ஜாவி எழுத்துக்களை அடிக்கடி இணைத்து, அழகெழுத்தின் வரலாறு மற்றும் பரிணாம வளர்ச்சியில் அவருக்கு இருந்த ஆழ்ந்த ஆர்வங்களைப் பிரதிபலிக்கிறார். இதன் விளைவாக வரும் உருவங்களும் வடிவங்களும் பார்வைக்குக் குறிப்பிடத்தக்கவை மற்றும்

**SG2**

பொருள்விளக்கத்தில் வளமானவை, மலாய் நினைவை ஆக்கப்பூர்வமான புதிய யோசனைகளுடன் இணைக்கின்றன.

சூரியானி சூரத்மான் (Suriani Suratman)
(பிறப்பு 1959, சிங்கப்பூர்)
மூன்றாம் பணிப்பொழுது 1
2017
பஃப் ரகு (Buff raku) என்கிற கரடுமுரடான களிமண், ஆரஞ்சு மற்றும் வெள்ளை ஜாலன் பஹார் (Jalan Bahar) களிமண் சீட்டு, யூகலிப்டஸ் மரச் சாம்பல் மெருகூட்டல்
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத் திரட்டு 2023-00145

சூரியானி சூரத்மானின் (Suriani Suratman) மூன்றாவது பணிப்பொழுது 1, பெண்களின் கண்ணுக்குத் தெரியாத உழைப்பு பற்றிய அமைதியான ஆனால் ஆற்றல் வாய்ந்த அறிதுயிலாகும் (meditation). ஊதியம் பெறும் வேலைகள், ஊதியம் பெறாத வீட்டு வேலைகள் மற்றும் குழந்தைப் பராமரிப்புக் கடமைகள் ஆகியவற்றுக்கும் மேலாகத் தன்னார்வத் தொண்டும், சமூக சேவையில் பெரும்பாலும் கவனிக்கப்படாத பெண்களின் பங்களிப்புகளான "மூன்றாவது பணிப்பொழுதை" சூரியானி எடுத்துக்காட்டுகிறார். தனது தாயாரால் ஈர்க்கப்பட்டு, மூன்று ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட 'கேஸிங்' என்கிற சுழலும் பம்பரங்கள் மூலம் வேலை, குடும்பம் மற்றும் சமூகம் என பெண்கள் ஈடுகட்டும் பல பாத்திரங்களை இப்படைப்பு ஒப்புக்கொள்கிறது. இந்த வடிவங்கள், ஒவ்வொன்றும் நிலைத்தன்மைக்காக மற்றொன்றை நம்பியிருப்பது, ஒரு நுட்பமான சமநிலையைக் குறிக்கிறது. ஒரு சமூக மானுடவியலாளரும் சிற்பியுமான சூரியானி, இஸ்கந்தர் ஜலீலின்கீழ் மட்பாண்டங்களைப் பயின்றார். மலாய் வீடுகளில் பாலின உறவுகள் குறித்த ஆராய்ச்சியால் அவரது நடைமுறை ஆழமாக அறியப்படுகிறது.

லிம் லியோங் செங் (Lim Leong Seng)
(பிறப்பு 1950, சிங்கப்பூர்)
வாழ்க்கை தொடங்குகிறது
1977
கயோலின் (Kaolin) களிமண்
கலைஞரின் திரட்டு

'வாழ்க்கை தொடங்குகிறது' என்ற புத்தகத்தில், லிம் லியோங் செங், (Lim Leong Seng) பாரம்பரிய கைவினை மற்றும் செயல்பாட்டுடன் தொடர்புடைய மட்பாண்டங்களின் பயன்பாட்டை ஒரு சிற்பப் பொருளாக மாற்றுவதன் மூலம் மறுவரையறை செய்கிறார்.

**SG2**

| |
|---|
| வழக்கமான குவளைகளைப் போலல்லாமல், லிம்மின் படைப்புகள் மேலே முத்திரையிடப்பட்டு, செயல்பாட்டை விட அதன் அழகியல் பண்புகளை வலியுறுத்துகின்றன. பஹாருதீன் தொழிற்கல்வி நிறுவனத்தில் பட்டம் பெற்ற லிம், இஸ்கந்தர் ஜலீலின் கீழ் மட்பாண்டக் கலையைக் கற்றுக்கொண்டார். சிற்பம், ஓவியம் மற்றும் படக்கோவை உள்ளிட்ட பல்வேறு கலைப் பயிற்சிகளுக்காக அவர் அங்கீகரிக்கப்பட்டவர். |
| ஹான் சாய் போர் (Han Sai Por)<br>(பிறப்பு 1943, சிங்கப்பூர்)<br>வளர்ச்சி<br>1985<br>பளிங்கு<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு ASB-0062<br><br>'வளர்ச்சி' ஐந்து மென்மையான சுருக்க வடிவங்களைக் கொண்டுள்ளது, அவை மெதுவாக வளைந்து வளைந்து, கரிம உயிராற்றலின் உணர்வைக் குறிக்கின்றன. நிலைத்தன்மை மற்றும் வலிமைக்குப் பெயர் பெற்ற பளிங்குக் கல்லால் செதுக்கப்பட்டிருந்தாலும், இந்த வடிவங்கள் உயிரோட்டமாகவும் நீர்மம் போன்றும் தோன்றுகின்றன. ஹான் சாய் போரின் (Han Sai Por) படைப்புகள் பெரும்பாலும், இயற்கை உலகத்தின் மீதான நெருக்கமான கவனத்தாலும், மனித அனுபவத்துடனான அதன் தொடர்பாலும் வடிவமைக்கப்பட்ட கரிம வடிவங்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. |

**SG2**

## உடல், தன்னகம் மற்றும் பிறர்

மனித உடலின் படங்களை உருவாக்குவது என்றால் என்ன? மற்றவர்களின் உடல்களுக்கு நாம் எவ்வாறு இடம் கொடுக்கிறோம்?

ஓவியர்கள் மனித உடலின் படங்களை ஒரு தனிப்பட்ட மற்றும் ஆழமான செயலாக உருவாக்கினர்.

'குழு 90' என்ற ஒரு முறைசாராக் கூட்டு நிறுவனம் மனித உடலைப் படிப்பதற்கும் விளக்குவதற்கும் தங்களை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டது. அவர்கள் லாசால் கலைக் கல்லூரியில் ஆடையில்லா உடல்களை வரைதல் மற்றும் ஸ்டாம்ஃபோர்டு (Stamford) கலை மையத்தில் மூடிய கதவுகளுக்குள் வாழ்க்கையை வரைதல் போன்ற வரைதல் அமர்வுகளை நடத்தினர், மேலும் ஒன்றாக கண்காட்சிகளை நடத்தினர். மாற்றுக் கலை வடிவங்கள் அதிகரித்து வந்த நேரத்தில், அவர்கள் மனித உருவத்தை ஓர் இன்றியமையாத அழகியல் வடிவமாகக் கருதி, அஃது அவர்களின் கலை வளர்ச்சிக்கு மையமாக இருந்தது என்பதில் உறுதியாக இருந்தனர்.

ஓவியத்தில் நிர்வாணம் குறித்த பண்பாட்டுக் கவலைகள் இருந்தபோதிலும், ஓவியர்கள் பாலினம், இனம் மற்றும் பாலியல் விருப்பு உள்ளிட்ட அடையாளத்தை ஆராய உடலுடன் தொடர்ந்து ஆய்வில் ஈடுபட்டனர். 1990களில், இளைய தலைமுறை ஓவியர்களும் உடலைப் பயன்படுத்தி பிரதிநிதித்துவம் மற்றும் பார்வையாளர்களாகிய நாம் சித்தரிக்கப்படும் நபரை எவ்வாறு பார்க்கிறோம் என்பது பற்றிய பரந்த கேள்விகளில் ஈடுபட்டனர். சில ஓவியர்கள், உடலைச் சுற்றியுள்ள மாறிவரும் பண்பாட்டு விதிமுறைகளை விசாரிக்க தங்கள் உடல்களை ஓர் ஊடகமாகப் பயன்படுத்தி, நிகழ்த்துகலையை நோக்கித் திரும்பினர்.

சியா வாய் ஹோன் (Chia Wai Hon)
(பிறப்பு 1927, சிங்கப்பூர்; இறப்பு. 2023, சிங்கப்பூர்)
மேல்
உயிரியல் படிவங்கள்
1975
காகிதத்தில் பொறித்தல்

கீழே
குற்றம் சாட்டும் விரல் முனைகள்
1999
காகிதத்தில் கரி
ஓவியரின் பரிசு
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு
P-1133 | 2010-01276

‘குற்றம் சாட்டும் விரல் முனை’யில் சாய்ந்திருக்கும் நிர்வாணம், அவரது உடலை ஓரளவு தனது கைகால்களால் மறைக்கிறது. மேல் வலது மூலையில், ஒரு சுட்டிக்காட்டும் விரல் ஊடுருவி, யார் சுட்டிக்காட்டுகிறார்கள்? ஏன்? என்ற ஒரு தெளிவற்ற கதையை அறிமுகப்படுத்துகிறது. ஓவியரும் ஓவியத்திறனாய்வுரைநருமான சியா வை ஹான் (Chia Wai Hon), மனித உருவத்தின் தேர்ச்சி ஓவியர்களுக்கு முக்கியம் என்று நம்பிய ஒரு முறைசாராக் கலைக் குழுவான 'குழு 90 இன் ஒரு பகுதியாக இருந்தார். அவரது நிர்வாணச் சித்தரிப்புகள், நிர்வாணத்தை ஒரு கலை வடிவம் என, சுற்றியுள்ள சமூகத் தடைகளால் கட்டுப்படுத்தப்படுவதை அவர் மறுப்பதைப் பிரதிபலிக்கின்றன.

எஸ். நமசிவாயம்
(பிறப்பு 1926, இந்தியா; இறப்பு 2013, சிங்கப்பூர்)
மேல்
தலைப்பற்றது
தேதியிடப்படாதது
காகிதத்தில் கரி

கீழே
தலைப்பற்றது
தேதியிடப்படாதது
காகிதத்தில் கரி
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு
2020-00288 | 2020-00290

| |
|---|
| எஸ். நமசிவாயத்தின் இவ்வரைபடங்கள், மனித வடிவத்துடனான அவரது ஆழமான ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றன, அதன் வெளிப்பாட்டுச் சாத்தியக்கூறுகளைக் கரியைப் பயன்படுத்தி சைகைக் கோடுகள் மூலம் படம்பிடிக்கின்றன. அவர் சிதைக்கும் முறைகளைப் பயன்படுத்துவது ஒவ்வோர் உருவத்தின் தீவிரத்தையும் அதிகரிக்கிறது. அவர் ‘குழு 90-இன் நிறுவன உறுப்பினராக இருந்தார், இக்குழு நிர்வாணத்தின் மீதான கலை ஆய்வுக்கு முழுமையாக ஒப்படைத்துக்கொண்ட ஒரு முறைசாராக் குழுவாகும், இதில் சகோதரர் ஜோசப் மெக்னலி (Brother Joseph McNally), லியு காங் (Liu Kang), சியா வை ஹான் (Chia Wai Hon), இங் எங் டெங் (Ng Eng Teng) மற்றும் பலர் இருந்தனர். 1987 முதல் 2001 வரை லாசால் கலைக் கல்லூரியில் உருவப்படம் வரைவதையும் கற்பித்தார். |
| கிறிஸ்சில்டா செரியன் (Chrisilda Cherian)<br>(பிறப்பு 1957, மலேசியா; இறப்பு தெரியவில்லை)<br>நடனக் கலைஞர்<br>1995<br>காகிதத்தில் சீன மை<br>சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு<br>1996-00160<br><br>'நடனக் கலைஞர்' ஓவியத்தில், பெண் உருவம் சுறுசுறுப்பான, துடிப்பான தூரிகை அசைவுகளால் வடிவம் பெறுகிறது, இது மர்மத்தையும் தெளிவின்மையையும் உருவாக்குகிறது. ஒரு தடித்த, தீர்க்கமான தூரிகை அசைவு அவ்வுருவத்தின் கண்களை மறைத்து, வேண்டுமென்றே அவள் பார்வையைத் தவிர்க்கிறது. ஓவியர் ஏன் அவ்வாறு செய்யத் தேர்ந்தெடுத்தார்?<br>பெண் நிர்வாணத்தின் பாரம்பரிய பிரதிநிதித்துவங்களை இஃது எந்த வழிகளில் கேள்வியெழுப்பக்கூடும்? லாசால் கலைக் கல்லூரியில் பட்டம் பெற்ற கிறிஸ்டில்டா செரியன் (Chrisilda Cherian), நடனம் மற்றும் இசையிலும் பயிற்சி பெற்றார், மேலும் உணர்ச்சித் தூண்டுதல்கள் மூலம் இயக்கத்தையும் ஆற்றலையும் வெளிப்படுத்த முயன்றார். |
| டான் ஓ பாங் (Tan Oe Pang)<br>(பிறப்பு 1947, சிங்கப்பூர்)<br>ஹேன் (*Han)* கழைக்கூத்து<br>1983<br>அரிசிக் காகிதத்தில் சீன மை மற்றும் வண்ணம் |

**SG2**

| |
|---|
| சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு<br>2015-00409<br><br>‘ஹேன் கழைக்கூத்து’ படைப்பில், இயக்கத்தில் இருக்கும் ஓர் ஆண் கழைக்கூத்தாடியின் ஆற்றலையும் கருணையையும் டான் ஓ பாங் (Tan Oe Pang) படம்பிடிக்கிறார். தடித்த தூரிகையடிப்புகள் உருவத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றன, அதே நேரத்தில் நீர்ம மை அழுத்தல் (smudge) தடங்கள் இயக்கத்தையும் ஆற்றலையும் பரிந்துரைக்கின்றன. பெரும்பாலும் ஒற்றை நிறத் தட்டு மூலம், டான் இப்பண்டைய நிகழ்த்துகலையை கௌரவிக்கிறார், ஆழ்மன வெளிப்பாட்டியல் மற்றும் கனவடிவியல் தாக்கங்களை வரைகிறார். இதன் விளைவாக பகுதி மனித உருவமாகவும், பகுதி அழகெழுத்தாகவும் ஒரு கலப்பு உருவாகிறது. டான் தனது 13 வயதில் உள்ளூர் மை ஆசிரியர் ஃபேன் சாங் தியனிடம் (Fan Chang Tien) பாரம்பரிய சீனக் கலையில் முறையான பயிற்சியைத் தொடங்கினார். |
| "நேரடி நிகழ்த்துகலையில் பார்வையாளர்களுடன் நேரடித் தொடர்பு கொள்வதற்கான பொருள்களாக எனது உடலையும் தனிப்பட்ட அனுபவத்தையும் பயன்படுத்துவதற்கான தேர்வு ஒரு தன்னினைவு உள்ள, வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒன்றாகும்."<br>அமண்டா ஹெங் (Amanda Heng), விளக்கக்காட்சிக் குறிப்புகள், தேதியிடப்படவில்லை.<br><br>அமண்டா ஹெங் (Amanda Heng) ஒரு பல்துறை நிகழ்த்து கலைஞர் ஆவார், அவரது படைப்புகள் பாரம்பரிய பாலினப் பாத்திரங்கள், பண்பாட்டு அடையாள அரசியல் மற்றும் சமகாலச் சமூகத்தில் உள்ள நகர்ப்புற மாற்றங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது. 30களின் பிற்பகுதியில் கலைத்துறையில் கவனம் செலுத்திய அவர், 1986 ஆம் ஆண்டு லாசால் கலைக் கல்லூரியில் தனது வரி அதிகாரி பணியை விட்டுவிட்டு அச்சுக்கலையைப் பயின்று வந்தார். ஓவியர்கள் கிராமத்தின் நிறுவன உறுப்பினரான ஹெங்கின் பயிற்சிமுறை, சமூகத் திறனாய்வுரை மற்றும் மாற்றத்திற்கான ஆற்றல்வாய்ந்த கருவிகளாக நடைப்பயிற்சி, பேசுதல் அல்லது தொடுதல் போன்ற எளிய அன்றாடச் செயல்களைப் பயன்படுத்தி, செயல்முறை மற்றும் பார்வையாளர் ஈடுபாட்டை வலியுறுத்துகிறது. 1999 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் ஓவியர்களால் நடத்தப்படும் முதல் பெண்கள் கூட்டான 'கலையில் பெண்கள்' அமைப்பையும் அவர் நிறுவினார். |

அமண்டா ஹெங் (Amanda Heng)
(பிறப்பு 1951, சிங்கப்பூர்)
ஊன்று நாற்காலி (stool) கொண்டு நடத்தல்
1999
ஊன்று நாற்காலி, சங்கிலி, காணொளி, ஒற்றை-ஒளிவழி, 5:4 தோற்ற விகிதம், நிறம் மற்றும் ஒலி (ஸ்டீரியோ), 12 நிமிடங்கள்
ஓவியரின் திரட்டு

சிங்கப்பூரிலிருந்த கலைக் கட்டுப்பாடுகளுக்கு அமண்டா ஹெங் அளித்த எதிர்வினையே 'ஊன்று நாற்காலி கொண்டு நடத்தல்'. 1997 ஆம் ஆண்டில், ஹெங்கிற்கு தேசிய கலை மன்றத்தால் தெலுக் குராவில் (Telok Kurau) ஒரு படைப்பகம் வழங்கப்பட்டபோது, அந்த இடத்தில் நிகழ்த்துகலைகளைத் தடைசெய்யும் ஓர் ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திட வேண்டியிருந்தது. இக்கட்டுப்பாடு, சிங்கப்பூர் அரசாங்கம் கிட்டத்தட்ட ஒரு பத்தாண்டுகட்கு நிகழ்த்து கலைக்கான நிதியை முடக்கியிருந்த ஒரு பரந்த சூழலின் ஒரு பகுதியாகும். 1994 ஆம் ஆண்டு ஜோசப் இங் (Josef Ng) எழுதிய சர்ச்சைக்குரிய 'பிரதர் கேன்' (B*rother Cane*) என்ற படைப்பைத் தொடர்ந்து இந்த முடக்கம் ஏற்பட்டது. ஹெங்கின் பதில் கூர்மையானதாகவும், விளையாட்டுத்தனமாகவும் இருந்தது. அவரும் அவருடைய கூட்டாளிகளும் ஒரு சங்கிலியில் ஒரு ஊன்று நாற்காலியை ஒரு செல்லப் பிராணியைப் போல மாறி மாறி நடத்தி, பூகிஸிலிருந்து (Bugis) ஆர்ச்சர்ட் சாலை (Orchard Road) வரையிலான தெருக்களிலும், அங்கிருந்து திரும்பியும் சென்றனர்.

அமண்டா ஹெங் (Amanda Heng)
(பிறப்பு 1951, சிங்கப்பூர்)
உடற்துண்டு பேசுகிறது I
1990
காகிதத்தில் கரி
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு
2024-00681

'உடற்துண்டு பேசுகிறது I', அமண்டா ஹெங்கின் கைகால்கள், கண்கள், வயிறு மற்றும் பிட்டம் போன்ற உடற்பாகங்களின் நெருக்கமான வரைபடங்களை ஒன்றாகக் கொண்டுவருகிறது. அமர்ந்திருப்பவர்களின் அடையாளங்கள் தெரியவில்லை. இந்த நெருக்கமான ஆனால் துண்டு துண்டான விரைவுச்சுடுவுகள் (snapshots) மூலம், இப்படைப்பு பாரம்பரிய உருவ வரைபடத்தை உடைக்கிறது, உடலின் நிலையான கருத்துகள் மற்றும் அதன் புறநிலைப்படுத்தலை அறைகூவல் செய்கிறது. ஹெங் தனது நடிப்புக் கலைக்காக மிகவும் புகழ்பெற்றவர் என்றாலும்,

SG2

| |
|---|
| இவ்வரைபடங்கள், வரைதலுக்கும், அவரது உடல் மற்றும் அடையாளத்தைப் பற்றிய தொடர்ச்சியான ஆய்வுக்கும் இடையிலான தொடர்புகளை வெளிப்படுத்துகின்றன. |
| அமண்டா ஹெங் (Amanda Heng)<br>(பிறப்பு 1951, சிங்கப்பூர்)<br>ஹோ சூன் யீன் (Ho Soon Yeen)<br>(பிறப்பு 1970, சிங்கப்பூர்)<br>சென் குன்யி (Chen Kunyi)<br>(பிறப்பு தெரியவில்லை)<br>குழு நிகழ்த்துகலை I<br>1992<br><br>தி ஸ்பேஸ் (The Space), ஹாங் பீ (Hong Bee) கிடங்கில் நிகழ்த்துகலை ஆவணங்கள் அமண்டா ஹெங்கின் அன்பான அனுமதியுடன் சிங்கப்பூர் தேசிய கலைக்கூட நூலகம் & காப்பகத்தால் மின்னிலக்கம் செய்யப்பட்டன. புகைப்படம் எடுத்தவர் கோ நுவாங் ஹவ் (Koh Nguang How).<br><br>குழு நிகழ்த்துகலை I என்பது அமண்டா ஹெங், ஹோ சூன் யீன் மற்றும் சென் குன்யி ஆகியோரின் கூட்டு நிகழ்த்துகலையாகும். இடத்துடனான அதன் உறவை ஆராய, அடையாளங்களை உருவாக்கும் ஓர் ஊடகமாக இஃது உடலைப் பயன்படுத்தியது. பார்வையாளர்களின் பங்கேற்பை வரவேற்கும் விதமாக, கலைஞர்கள் வீட்டு வண்ணப்பூச்சுகளைப் பூசி, தற்போது இடிக்கப்பட்ட ஹாங் பீ (Hong Bee) கிடங்கின் கூரையின் சுவர்கள், தரை, ஓரங்கள் மற்றும் படிக்கட்டுகள் உட்பட பல்வேறு பரப்புகளில், தங்கள் உடலின் வரையறைகளைக் கண்டறிந்தனர். சிங்கப்பூர் சர்வதேசக் கலை விழாவுடன் இணைந்து ஓவியர்கள் கிராமம் (Artists Village) நடத்திய நிகழ்த்துகலையின் ஒரு பகுதியாக 1992 ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்ட இந்த நிகழ்த்துகலை, கலை என்னவாக இருக்க முடியும், சமூகத்தில் கலைஞரின் பங்கு என்ன என்பது பற்றிய மாறிவரும் கருத்துகளைப் பிரதிபலிக்கிறது. |
| சூசி வோங் (Susie Wong)<br>(பிறப்பு 1956, சிங்கப்பூர்)<br>கருப்பைத் தொடர் #7<br>1997<br>கித்தானில் எண்ணெய்<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2024-01097 |

**SG2**

| |
|---|
| கருப்பைத் தொடர் #7, பெண்களை மையமாகக் கொண்ட கண்ணோட்டத்தில் வரையப்படும் நிர்வாண ஓவிய வகைக்கான எதிர்வினையாகும். ஒரு வயதான எழிற்காட்டுநரைச் (model) சித்தரிக்கும் இப்படைப்பு, இளம் உடல்களுக்குச் சலுகை அளிக்கும் பாரம்பரிய அழகு இலட்சியங்களை ஆராய்கிறது. கரு நிலையில் சுருண்டு கிடக்கும் இவ்வுருவம், முதுமை மற்றும் குழந்தைப் பருவம் இரண்டையும் குறிக்கிறது, பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலான சுழற்சித் தொடர்பை எடுத்துக்காட்டுகிறது. நிர்வாண ஓவியம் என்பது ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் ஒரு செயலாக இருந்தபோதிலும், வோங் தனது வீட்டில் நிர்வாண உடல் வரைதல் அமர்வுகளை நடத்தினார், இதில் பெரும்பாலும் பெண்கள் கலந்து கொண்டனர். உடலைப் பற்றி அவரவர் சொந்தக் கருத்துக்களில் படிப்பது என்றால் என்ன, அது நாம் பார்ப்பதை எவ்வாறு மாற்றக்கூடும்? |
| ஹோ சூன் யீன் (Ho Soon Yeen)<br>(பிறப்பு 1970, சிங்கப்பூர்)<br>தொங்கும் வயிற்றைக்கொண்டு இந்த நிலையிலிருந்து வரைதல்<br>1992<br>காகிதத்தில் மை<br>தனியாரின் திரட்டு<br><br>இவ்வுருவப்படத்தில், ஹோ சூன் யீன் (Ho Soon Yeen) தன்னைப் பற்றிய ஒரு பச்சையான மற்றும் வடிகட்டப்படாத சித்தரிப்பை வழங்குகிறார், அது நேர்மையானது மற்றும் தன்னகத்தை வெளிப்படுத்துகிறது. தன்னை ஓர் ஓவியராகவும், ஒரு கருப்பொருளாகவும் சித்தரித்துக் கொண்டு, ஓர் அலங்காரமற்ற பிம்பத்தை வரைகிறார், அவரது கலைந்த கூந்தல் மற்றும் அவரது "தொங்கும் வயிறு" என்பது பெண்களின் உடல்களின் இலட்சியப்படுத்தப்பட்ட பிரதிநிதித்துவங்களைச் சவால் செய்யும் ஒரு தலைப்பாகும். விளையாட்டுத்தனமான ஆனால் இழிவான கண்ணோட்டத்துடன், ஹோ, பெண் நிர்வாணத்தின் மீதான பாரம்பரிய பிம்பங்களையும், பெரும்பாலும் ஆண் பார்வையை நிறைவு செய்வதாக இருந்த அழகு என்றால் என்ன என்பதையும் தலைகீழாக மாற்றுகிறார். லாசால் கலைக் கல்லூரியில் பட்டம் பெற்ற ஹோ, கலையில் வழக்கத்திற்கு மாற்றான அடையாளம் மற்றும் பிரதிநிதித்துவத்துடன் திறனாய்வுரைப்பில் ஈடுபாட்டிற்காக அறியப்பட்ட ஓர் ஓவியர் மற்றும் கல்வியாளர் ஆவார். |